Koviloor Digital Library

திருஅருட்பிரகாச வள்ளலார் அருளிய

சன்மார்க்கம்

இந்து சமய அறநிலையத்துறை

ACC No 44029
R65 - வள்ள

Koviloor Digital Library

Koviloor Digital Library

4/5

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட்பிரகாச வள்ளலார் அருளிய

சன்மார்க்கம்

இந்நூல் பெருமானார் அருளிய உபதேசங்களிலிருந்தும் திருஅருட்பா ஆறாம் திருமுறையிலிருந்தும் தொகுக்கப்பெற்றது.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44029

வெளியீடு:

திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம்,
வடலூர், தமிழ்நாடு.

Koviloor Digital Library

நூலின் பெயர்	:	வள்ளற்பெருமானார் அருளிய சன்மார்க்கம்
முதற்பதிப்பு	:	05.10.2003 5000 பிரதிகள்
இரண்டாம் பதிப்பு	:	01.02.2007 5000 பிரதிகள்
மூன்றாம் பதிப்பு	:	05.10.2011 5000 பிரதிகள்
நான்காம் பதிப்பு	:	01.09.2013 5000 பிரதிகள்
ஐந்தாம் பதிப்பு	:	09.02.2017 (146 வது தைப்பூசம்) 10000 பிரதிகள்
ஆறாம் பதிப்பு	:	5.10.2023 வள்ளலார் வருவிக்கவுற்ற நாள் 200வது ஆண்டு 2000 பிரதிகள்
பக்கங்கள்	:	104
விலை	:	ரூ 50 மட்டும்
அச்சிட்டோர்	:	ஜோதி எண்டர்பிரைசஸ். 49, சூரப்பா தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005
பதிப்பு உரிமை	:	வள்ளலார் தெய்வ நிலையம், வடலூர் 607303. கடலூர் மாவட்டம் 04142 259250

Koviloor Digital Library

4/5

திருஅருட்பிரகாச வள்ளலார் அருளிய

சன்மார்க்கம்

வ.எண்.	பொருளடக்கம்	பக்கம்
	பாயிரம்	
	முன்னுரை	
	நூல்	
	பாகம் 1	
	உரைநடையில் சன்மார்க்க விளக்கம்	
1.	ஜீவகாருணிய ஒழுக்கம்	1
2.	ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம்	3
3.	சாத்திய நிலை	7
4.	சுத்த சன்மார்க்கக் கொள்கை	7
5.	சன்மார்க்கக் கொள்கை	8
6.	சுத்த சன்மார்க்க முடிபு	9
7.	சாகாத கல்வி	9
8.	சாகாக் கல்விக்கு ஏது	9
9.	சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடைகள்	9
10	சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம்	10
11.	சுத்த சன்மார்க்க சாதனம்	12
12.	சன்மார்க்க சாதனம்	13
13.	சுத்த சன்மார்க்கப் பிரார்த்தனை	13
14.	சுத்த சன்மார்க்க சத்திய ஞானாசாரம்	13

Koviloor Digital Library

15.	சன்மார்க்க ஆகாரம்	14
16.	சுத்த சன்மார்க்க ஆகாரம்	15
17.	சர்க்கரை	15
18.	கரிசாலையும், தூதுளையும்	15
19.	சுத்த சன்மார்க்க அனுபவ ஸ்தானம்	16
20.	திருவருண் மெய்ம்மொழி	16
21.	சன்மார்க்க சங்கம் விளங்கும் காலம்	21
22.	சன்மார்க்கப் பெரும்பதி வருகை	21
23.	சன்மார்க்க சங்க பழக்க விதி	22
24.	பேருபதேசம்	23
	பாகம் 2	
	திருஅருட்பா ஆறாம் திருமுறையில்	
	சன்மார்க்க விளக்கம்	33
	பின் இணைப்புகள்	
1.	சன்மார்க்க சங்கம்	50
2.	சன்மார்க்கப் பயிற்சி	57

Koviloor Digital Library

இவ்வரிய நூலின் மறுபதிப்பிற்கு முன்னின்ற நன்றிக்கு உரியவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திருமிகு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

ஆணையின்படி

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்

உயர்திரு. **எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்** அவர்கள்

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்

உயர்திரு. **பி.கே. சேகர்பாபு** அவர்கள்

வழிகாட்டுதலில்

உயர்திரு. **க. மணிவாசன்** இ.ஆ.ப அவர்கள்
அரசு முதன்மை செயலர்
(சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

உயர்திரு. **ஜெ. குமரகுருபரன்** இ.ஆ.ப அவர்கள்
சிறப்பு பணி அலுவலர், இந்து சமய அறநிலையத்துறை

உயர்திரு. **க.வீ.முரளிதரன்** இ.ஆ.ப அவர்கள்
ஆணையர், இந்துசமய அறநிலையத்துறை

உயர்திரு. **ஜெ.பரணிதரன்,** பி.ஏ. பி.எல்.,
இணை ஆணையர், கடலூர்.

Koviloor Digital Library

முன்னுரை

இரக்க வடிவராய்த் திகழ்கின்ற திருஅருட்பிரகாச வள்ளற் பெருமானார், அருட்பெருஞ்ஜோதி அற்புத ஆண்டவரால் சன்மார்க்கம் தழைக்க வருவிக்க உற்றார், இறை நிலையைப் பெற்றார்.

''என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே'' என்கின்ற பெருமானார், சன்மார்க்கத்தைப் பற்றிய முழுமையான, அருமையான (அருள்) அற்புத விளக்கங்களைத் திருவருட்பா உரைநடைப் பகுதி திருவருட்பா ஆறாம் திருமுறை, விண்ணப்பங்கள், திருமுகங்கள் முதலியவற்றில் அருளி உள்ளார்கள். அவற்றைத் தொகுத்து இந்நூலை மலிவு விலைப் பதிப்பாக வெளியிடுகின்றோம்.

சுத்த சன்மார்க்கத்தின் சிறப்புகள்

1.சாதி, மதம், இனம், மொழி, நிறம், தேசம் முதலிய வேறுபாடுகள் இல்லாத சுத்த சன்மார்க்க சமுதாயம் ஏற்பட வழி காட்டுகின்றது.

2. உயிர் இரக்கமும் ஆன்மநேயமும் நிறைந்து ததும்பி வழியும் அருட் (கருணை) கடல் தான் சுத்த சன்மார்க்கம்.

3. சுத்த சன்மார்க்கம் ஒன்றே மண்ணிலும், விண்ணிலும் அருட்செங்கோல் ஆட்சி செலுத்துகின்றது.

4. உலகியல், அருளியல் ஆகிய இரண்டிற்கும் உகந்தது சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒன்றுதான்.

5. ஊனேயும் உடல் அழியாது ஊழி தோறும் ஓங்குவது சுத்த சன்மார்க்கம்.

6. செத்தவர்கள் எழுந்து சிரித்து மகிழ்கின்ற மார்க்கம் சுத்த சன்மார்க்கம்.

7. தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என மார்க்கங்கள் நான்கில் உயிர்களைத் தானாக நடத்தும் சன்மார்க்கமே மிக உயர்ந்தது. அது காலம் கடந்தது. மற்ற மூன்று மார்க்கங்களும் சன்மார்க்கத்தை அடைவதற்கான படிகளே. சுத்த சன்மார்க்கத்தில் மட்டுமே மரணத்தைத் தவிர்த்து நித்திய தேகமாக்கி மரணமிலாப் பெருவாழ்வில் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் தடைபடாத பேரின்பப் பெரு வாழ்வைப் பெற்று அருட்பெருஞ்ஜோதி ஆகலாம்.

எனவேதான் வள்ளற்பெருமானார்

என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம்''
''அழியா ஒரு நெறியாம் சன்மார்க்கத் திருநெறி''

Koviloor Digital Library

'சகாதவனே சன்மார்க்கி'' என முரசு அறைகின்றார்கள்.

சன்மார்க்கத்தின் மீது இச்சை

ஒரு பதார்த்தத்தை அனுபவித்தால் அல்லது அந்தப் பதார்த்தத்தினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின் மேல் இச்சை போகாது. அதுபோல தெய்வத்தை உள்ளபடி அனுபவித்தால் அல்லது தெய்வத்தின் இடத்தில் பிரியம் வராது. ஆதலால் தெய்வத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற முக்கிய லட்சியத்திலிருந்து கொண்டு விசாரம் செய்து கொண்டிருங்கள் என பேருபதேசத்தில் பெருமானார்அருளுகின்றார்கள்.

வள்ளற்பெருமானார் அருளியது போன்று சுத்தசன்மார்க்கம் இன்னதென்று அறிந்து அனுபவித்தால் தான் சுத்த சன்மார்க்கத்தின் மீது இச்சை வரும். சன்மார்க்கத்தின் மீது இச்சை ஏற்பட பேருபதேசத்தைக் கற்க வேண்டும்.

ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின் என்பது மதம்.

ஈசனோடு மட்டுமின்றி உயிர்கள் மீதும் இச்சை - இரக்கம் வைக்க வேண்டும் என்பது - சுத்த சன்மார்க்கம். உயிர்களிடத்து இரக்கமும், கடவுளிடத்து அன்பும் மாறாது இருக்க வேண்டும் என்பதே சன்மார்க்க சாதனமாகும்.

சன்மார்க்கப் படிகள் :

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கும் இறைவனை அடைவதற்கான படிகளாகும். இவை ஒவ்வொன்றும் நான்கு படிகளை உடையது. பதினாறு படிகளையும் தனித்தனியே கடந்து கருணைக் கடலாகிய அருட்பெருஞ்ஜோதியைத் தரிசிக்க வேண்டும்.

ஒரு படியைக் கூடக் கடக்க இயலாத நமக்கு ஒரே மூச்சில் நேரிடையாக பதினைந்தாவது படிக்கு ஏறுவதற்கு உரிய வழி ஒன்றைப் பெருமானார் அருளியுள்ளார்கள்.அதனை இந்நூலின் பக்கத்தில் கற்கலாம்.

சன்மார்க்க முதற் சாதனம்

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு முடிவான இன்பானுவத்திற்குச்

சாதக சகாயமான திருவருள் மகாவாக்கியத் திருமந்திரத்தை இறை உண்மையை வெளிப்படக் காட்டும் மகா மந்திர வாக்கியத்தை வள்ளற்பெருமானாருக்கு வெளியிட்ட அவ்வண்ணம் பெருமானாரின் மெய்யறிவின் கண் அனுபவித்து எழுந்த உண்மை அறிவு அனுபவானந்த

Koviloor Digital Library

இன்பத்தை நாம் எல்லவரும் அடைய வேண்டும் என்கின்ற இரக்கத்தால் குறிப்பித்தார்; குறிப்பிடுகின்றார்; குறிப்பிப்பார்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் கட்டளை இட்டது யாதெனில் நமக்கு முன் சாதனம் கருணை ஆனதினாலேயே ஆண்டவர் சன்மார்க்க முதற் சாதனமாக

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். மகாமந்திரம் மந்திரங்களுக்கு எல்லாம் மணி மகுடம் போன்றது.

இது வரைக்கும் ஒழுக்கத்திற்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷர்களாய் இருந்தாலும், காலம் நேரம் இடம் கருதாது, மனத்தூய்மையுடன் மகா மந்திரத்தை நாம் ஓதி வந்தால் முடிவான இன்பானுபவம் பெறலாம். "சந்ததமும் வேத மொழியாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்."

மகா மந்திரத்தை நாவசையாமல் ஓதியும் ஜீவகாருணிய ஒழுக்கத்தோடு வாழ்பவர்கள் சன்மார்க்கத்தின் முடிந்த முடிபான அருட்பெருஞ்ஜோதி ஆகலாம்.

இதனை,

இத்தினமே அருட்ஜோதி எய்துகின்ற தினமாம்
இனிவரும் அத்தினங்கள் எலாம் இன்பம் உறுதினங்கள்
சுத்தசிவசன்மார்க்கம் துலங்கும் எலா உலகும்
தூய்மை உறும் நீ உரைத்தசொல் அனைத்தும் பலிக்கும்
செத்தவர்கள் எழுந்து உலகில் திரிந்து மகிழ்ந்திருப்பார்
திருவருட் செங்கோல் எங்கும் செல்லுகின்றதாமே

என்று அருளுகின்றார்கள். (பாடல் எண் 2549)

இன்னும் இதுபோன்ற சன்மார்க்க விளக்கங்களை இந்நூலில் கற்று அதன்வழி நின்று களிப்படைய வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

ஆர். சந்திரன்
தக்கார்/உதவி ஆணையர்

ஜெ. ராஜா சரவணக்குமார்
செயல்அலுவலர்

நாள்:
05.10.2023

Koviloor Digital Library

திருஅருட்பிரகாச வள்ளலார் அருளிய

சன்மார்க்கம்

பாகம் 1

உரைநடையில் சன்மார்க்க விளக்கம்

1. ஜீவகாருணிய ஒழுக்கம்

தொகுப்பு :

(வள்ளற்பெருமானார் அருளிய ஜீவகாருண்ய ஒழுக்கம் என்னும் நூலிலிருந்து தொகுத்தது)

சன்மார்க்கம் என்பதும் ஞானவழி என்பதும் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்று அறிய வேண்டும்.

பசியினால் வரும் துன்பத்தையும் கொலையினால் வரும் துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பது பர ஜீவகாருண்யம், ஆதலால் இவ்வுலக இன்பங்களையும், அளவறிந்த சித்தி இன்பங்களையும் எக்காலத்தும் அழியாத முத்தி இன்பத்தையும் அருளால் அடையப் படுமென்று அறிய வேண்டும்.

ஊழ் வகையாலும், அஜாக்கிரதையாலும் அன்னிய ஜீவர்களுக்கு நேரிடுகிற அபாயங்களை நிவர்த்தி செய்விப்பதற்குத் தக்க சுதந்தரமும், அறிவுமிருந்தும், அவ்வாறு செய்யாமல் வஞ்சித்தவர்களுக்கு, இவ்வுலக இன்பத்தோடு மோட்ச இன்பத்தை அனுபவிக்கின்ற சுதந்தரம் அருளால் அடையப் படுவதில்லையென்றும் தற்காலத்தில் அனுபவிக்கின்ற புவன போகச் சுதந்தரங்களையும் இழந்து விடுவாரென்றும் கடவுள் வேதத்தில் விதித்திருக்கின்ற படியால் ஊழ் வகையாலும் அஜாக்கிரதையாலும் பசி, கொலை என்பவைகளால், வரும் அபாயங்களை நிவர்த்தி செய்துகொள்ளத்தக்க அறிவும் சுதந்தரமும் இல்லாத ஜீவர்கள் விஷயத்தில் அவைகளை நிவர்த்தி செய்விக்கத்தக்க அறிவும் சுதந்திரமும் உள்ள ஜீவர்கள் வஞ்சியாமல் தயவினால் நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யத்திற்கு முக்கியமான லட்சியமென்றும்: அதில் சத்தியமாக நம்பிக்கை வைத்துப் பசித்த ஜீவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்கியும், ஜீவர்களுக்குச் செய்வகையால்

Koviloor Digital Library

கொலை நீக்கியும், திருப்தி இன்பத்தை உண்டு பண்ணுவதே மேலான பிரயோஜனம் என்றும் அறிய வேண்டும்.

பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும், எந்தச் சமயத்தாராயினும் எந்த ஜாதியாயினும் எந்தச் செய்கையாராயினும் அவர்கள் தேசவொழுக்கம், சமயவொழுக்கம், ஜாதியொழுக்கம், செய்கையொழுக்கம் முதலானவற்றை விசாரியாமல், எல்லா ஜீவர்களிடத்தும் கடவுள் விளக்கம், பொதுவாய் விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே - ஜீவகாருண்யம்.

சன்மார்க்க ஒழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசி நிவர்த்தி செய்துகொள்ளத்தக்க மிருகம், பறவை, ஊர்வன, தாவரம் என்கின்ற உயிர்களுக்குப் பசி வந்தபோது, பசியை நிவர்த்திச் செய்விப்பதே - ஜீவகாருண்யம்.

பசியை நிவர்த்தி செய்து கொள்ளத்தக்கப் புவன போக சுதந்தரங்களைப் பெறுதற்குரிய அறிவு இருந்தும், - பூர்வ கர்மத்தாலும், அஜாக்கிரதையாலும், அச்சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் பசியினால் வருந்துகின்ற ஜீவர்களுக்கு ஆகாரம் கொடுத்து அந்தப் பசி வருத்தத்தை நீக்கித் திருப்தி இன்பத்தை உண்டு பண்ணுவதற்குக் காரணமாகிய ஜீவகாருண்யம் என்கின்ற திறவுகோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழ வேண்டும்.

ஆகலின், ஜீவகாருண்யமென்கின்ற மோட்ச வீட்டுத் திறவுகோலைக் காலமுள்ளதே சம்பாதித்துக் கொண்ட சமுசாரிகள் - சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல், எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து அவ்வீட்டுக் கதவை திறந்து கொண்டு, உள்ளே புகுந்து, நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள்.

ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் முக்கியமாக எல்லா ஜீவர்களுக்கும் பொதுவில் பசியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்து ஆகாரத்தினால் திருப்தி இன்பத்தை உண்டு பண்ண வேண்டுமென்றும்,

பசியைப் போல் வேறு வகையினால் ஜீவகொலை நேரிடுவதனால் அந்த ஜீவ கொலையைத் தம்மாற் கூடிய வரையில் எவ்விதத்திலாயினும் தடை செய்து உயிர்பெறுவித்துச் சந்தோஷிப்பிக்க வேண்டுமென்றும்,

Koviloor Digital Library

பிணி, பயம் முதலிய மற்ற ஏதுக்களால் ஜீவர்களுக்குத் துன்பம் நேரிடில் அத்துன்பங்கள் தங்களால் நீக்கத்தக்கவைகளாகில் நீக்க வேண்டுமென்றும்,

மிருகம், பறவை, ஊர்வன, தாவரம் முதலிய உயிர்களிடத்தும் பயத்தினால் வரும் துன்பத்தையும், கொலையினால் வரும் துன்பத்தையும் எவ்விதத்தும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும்,

அவற்றுள் துஷ்ட ஜீவர்களிடத்தும் சிறிது பயத்தினால் வரும் துன்பம் மாத்திரமே அல்லது கொலையினால் வரும் துன்பங்களைச் செய்யப்படாது என்றும்,

இவ்வகை முழுதும் ஜீவகாருண்யமே ஆதலால், எல்லா உயிர்களிடத்தும் ஜீவகாருண்யம் வேண்டுமென்று கடவுளால் ஆணை செய்ததென்றறிய வேண்டும்.

2. ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம்

சமரச வேத சன்மார்க்க சங்கம் என்பதற்குப் பொருள்: எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவுநூல் முடிபான நான்காவது மார்க்கத்தை அனுஷ்டிக்கின்ற கூட்டமென்று கொள்க.

மேற்படி மார்க்கம் நான்காவன: தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் என நான்கு.

ஷடாந்தம்:

ஷடாந்த சமரச சுத்த **சிவ சன்மார்க்கம்** என்பதில் ஷடாந்தம் என்பது யாது ? **வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம்** ஆக ஆறு. மேற்படி அந்தங்களின் அனுபவம், காலம் இடம் முதலிய வேறுபாடுகளால் ஏறிக் குறையும்.

ஆதலால் ஷடாந்தமும் வியாபகமில்லாமல் வேதாந்த சித்தாந்தத்தில் நான்கந்தமும் வியாப்பியமாய் (அடங்கி) இருக்கின்றன. மேற்படி அந்தம் நான்கின் ஐக்கிய விவரம்: வேதாந்தத்தில் போதாந்த, யோகாந்தமும்; சித்தாந்தத்தில் நாதாந்த, கலாந்தமும்; அடங்கி இருக்கின்றன. இந்த ஐக்கியம் பற்றி வேதாந்த சித்தாந்தமே இப்போது அனுபவத்தில் சுத்த வேதாந்த, சுத்த சித்தாந்தமாய் வழங்குகின்றன.

இவற்றிற்கு அதீதம் ஆகிய சுத்த வேதாந்த சித்தாந்த அந்தாந்த மாகிய சமரச சுத்த சன்மார்க்கமே நித்திய மார்க்கம். மேற்குறித்த மார்க்கத்திற்குச் சமய மதங்களாகிய சன்மார்க்கங்கள் அந்நியமாய்

Koviloor Digital Library

விளங்கும்; அந்நியமல்ல. மேற்படி சமயமத மார்க்கங்கள் எவை எனில்; சமய சன்மார்க்கம் மத சன்மார்க்கம் என இரண்டு. இவற்றுள் அடங்கிய சன்மார்க்கம் அனந்தம். அதில் சமய சன்மார்க்கத்தின் வகை ஆறு, தொகை முப்பத்தாறு, விரிவு அறுகோடி. இதுபோல் மதத்திலும் வகை, தொகை விரிவு உள்ளன. மேற் குறித்த சமய மத சன்மார்க்கங்களில் வகரவித்தை, தகரவித்தை உள. அவை அவ்வச் சமயமத சன்மார்க்கங்களின் தலைமையாகிய கர்த்தா, மூர்த்தி, ஈசுவரன், பிரமம், சிவம் முதலிய தத்துவங்களின் காலப் பிரமாண பரியந்தமிருக்கும்; அதற்குமேலிரா. மேற்படி சமயமத சன்மார்க்கங்களில் ஷடாந்த சமரசம் உளதோ எனில்; உளது. யாதெனில்: வேதாந்த சித்தாந்த சமரசம், யோகாந்த கலாந்த சமரசம், போதாந்த நாதாந்த சமரசம். இதற்கு அதீதம் ஷடாந்த சமரசம். இதற்கு அதீதம் சன்மார்க்க சமரசம், இதற்கு அதீதம் சுத்த சமரசம். ஆதலால், சுத்த சமரசத்தில் சன்மார்க்கத்தைச் சேர்க்க சுத்த சமரச சன்மார்க்கமாம். இது பூர்வோத்தர நியாயப்படி, கடைதலைப் பூட்டாகச் சமரச சுத்த சன்மார்க்கமென மருவியது.

இதன் தாத்பரியம் யாதெனில்: சமரசம் என்பதற்குப் பொருள், எல்லா அந்தங்களினது அந்தமும் தனக்குப் பூர்வமாக்கித் தான் உத்திரத்தினின்று மருவியது சமரசம். இதற்கு அனுபவம் குருதுரிய ஸ்தானம். சுத்த சமரசம் என்பதற்கு நியாயம்: விந்து பரவிந்து இரண்டையும் மறுக்கச் சுத்தவிந்து வந்தது போலும், சிவம் பரசிவம் இரண்டையும் மறுத்தது சுத்தசிவம் வந்தது போலும், சன்மார்க்கம் சிவசன்மார்க்கம் இரண்டையும் மறுத்தது சுத்த சன்மார்க்கம். பூர்வத்தில் நின்ற சமயமத சன்மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம். இதன் பொருட்டு ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம் என்றே மருவியது. ஒருவாறு, ஷடாந்தங்களின் பொதுவாகிய ஷடாந்த சன்மார்க்கம் ஒன்று, இதன் பூர்வத்தில் சமரச சன்மார்க்கம் ஒன்று,

இதன் உத்தரத்தில் சுத்த சன்மார்க்கம் ஒன்று: ஆதலால் ஷடாந்த சமரசம். ஆன்மாவுக்கு அருள் எப்படி அநந்நியமோ, அதுபோல் சுத்த சன்மார்க்கத்திற்குப் பூர்வத்தில் சொன்ன சன்மார்க்கங்கள் யாவும் அநந்நியம் (அந்நியமல்ல).

சன்மார்க்கம் என்பதில் வகை தொகை விரிவு அனந்தம். இதன் தாத்பரியம் யாதெனில்: சமய சன்மார்க்கத்தின் பொருள் குணத்தினது லக்ஷியத்தை அனுசந்தானஞ் (பயில்வது) செய்வது. குணமென்பது யாது? சத்துவகுணம். இயற்கை உண்மை ஏகதேசமான சத்துவ குணத்தின் சம்பந்தமுடைய மார்க்கமே சமய சன்மார்க்கம். சத்துவ

Koviloor Digital Library

சம்பந்தமுடைய மார்க்கம் யாதெனில்: சத்போதம், சத்கர்மம், சத்சங்கம், சத்காலம், சத்விசாரம், சத்பாத்திரம், சற்சனம், சற்செய்கை முதலியனவும் சத்துவ சம்பந்தம் உடையன. இதன் இயல்பாவன: கொல்லாமை, பொறுமை, சாந்தம், அடக்கம், இந்திரிய நிக்கிரகம், ஆன்ம இயற்கைக் குணமாகிய ஜீவகாருணியம். இது சத்துவ குணத்தின் வாச்சியார்த்தம்.

இவ்வண்ணம் வாச்சியானுபவம் பெற்றுச் சொரூபானு பவமாகிய சாதனமே சமய சன்மார்க்கம்.

சமயாதீதமாவது மதம். மத சன்மார்க்கத்தின் பொருள் நிர்க்குண லக்ஷியஞ் செய்வது. நிர்க்குண மாவது பூர்வகுணமாகிய சத்துவத்தின் வாச்சியானுபவம் பெற்று லட்சியானுபவம் பெறுதல். யாதெனில்: சோகம், சிவோகம், தத்வமசி, சிவத்துவமசி என்னும் வாக்கியத்தின் முக்கியானுபவம். அனுபவம் என்பது யாது?....

சத்துவகுண நிர்க்குண லட்சியத்திற்கு மார்க்கம் நான்கு: எவை எனில் சத்துவ குணத்தின் முதல் விளைவு தன்னடிமையாகப் பலரையும் பாவித்தல், இரண்டாவது புத்திரனாகப் பாவித்தல், மூன்றாவது சிநேகிதனாகப் பாவித்தல், நான்காவது தன்னைப்போலப் (தானாக) பாவித்தல். இது ஜீவ நியாயம். இவ்வாறே, தான் கடவுளுக்கு அடிமையாதல், புத்திரனாதல், சிநேகனாதல், கடவுளேதானாதல்; இது சத்துவகுண லட்சியார்த்தமாகிய மத சன்மார்க்க முடிபு.

சத்துவகுண விளைவு என்பதற்குப் பொருள் சத்துவ குணத்தின் முக்கிய லட்சியமாகிய எல்லாம் வல்ல சர்வ சித்தியோடு ஞானசித்தியைப் பெறுதல். நெல்லை விளைத்தான் என்பதன் பொருள் உழுதல் தொடங்கிக் கிருகத்தில் சேர்த்து அனுபவிக்கின்ற பரியந்தம் அடங்கியிருப்பது போல் சன்மார்க்கம் என்பது சாதாரணம் முதல் அசாதாரணம் ஈறாக அடங்கிய பொருளெனக் கொள்க. குண, நிர்க்குண, வாச்சிய, லட்சியார்த்தமாகிய சமய, மதத்தின் அனுபவமல்லாதது சுத்த சன்மார்க்கம். இம் மார்க்கத்திற்கு மேற்குறித்த மார்க்கங்கள் அல்லாதனவேயன்றி இல்லாதனவல்ல.

சுத்த சன்மார்க்கந்தான் யாதெனில்:

சுத்தம் என்பது ஒன்றும் அல்லாதது. சுத்தம் என்பது சன்மார்க்க மென்னுஞ் சொல்லுக்குப் பூர்வம் வந்ததால், மேற்குறித்த சமய, மத அனுபவங்களைக் கடந்தது. சத்மார்க்கம் என்னும் பொருட்கு அர்த்தம் நான்கு வகை: அஃது பூர்வாதி உத்தரோத்தர பரியந்தம். இதன் முக்கிய லட்சியம் சுத்த சன்மார்க்க அனுபவ ஸ்தானமாகிய சுத்த சிவ துரியாதீத

Koviloor Digital Library

நிலை பெறில் விளங்கும். ஏகதேசத்தில் ஒருவாறு பூர்வம் என்பதற்குப் பொருள் :

சிருஷ்டியாதி அனுக்கிரகம் ஈறாகச் செய்யும் பிரமாதி **சதாசிவம்** ஈறாகவுள்ள பஞ்ச கிருத்திய கர்த்தர்களின் ஒவ்வொரு கிருத்தியத்தின் விரிவு ஐந்தாக விரிந்த கர்த்தர் பேதம் இருபத்தைந்தாக விரிந்த **மஹாசதாசிவானந்த அனுபவ** காலத்தை அறுபத்து நாலாயிரத்தில் பெருக்கிய கால அளவு எவ்வளவோ அக்கால அளவு **சுத்த மகா சதா சிவானுபவத்தைப்** பெற்றுச் சுத்த தேகியாயிருப்பது.

சத்தென்பது பரிபாஷை. அது அனந்த தாத்பரியங்களைக் கொண்டு ஓர் வாக்கிய பதமாய் நின்றது. மார்க்கம் என்பது யாதெனின்: துவாரம், வழி. வழி யென்பது சத்தென்னும் பொருளின் உண்மையைத் தெரிவிக்கின்ற மார்க்கம். ஆதலால், எவ்வகையிலும் உயர்வுடையது பாவனாதீத அதீதம், குணாதீத அதீதம், வாச்சியாதீத அதீதம், லட்சியாதீத அதீதம், ஆகிய சுத்த சன்மார்க்கம்.

மேற்படி மார்க்கத்தின் ஏகதேசம் அடியிற் குறிக்கும் அனுபவங்கள்: எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வகைத் தடையும் வாராத சுத்தமாதி ஞானதேக சித்தியும், அண்ட பிண்ட தத்துவங்களைச் சுதந்தரத்தில் நடத்தும் தனிப்பெரும் வல்லமையும், ஏம ரவுப்பிய பிரேதஜீவிதாதி சித்தியும், வஸ்துப் பிரத்யக்ஷானுபவ சித்தியும் ஆகிய இவற்றை ஒருங்கே அடைவது மேற்குறித்த மார்க்கத்தின் முடிபு; ஒருவாறு.

சத் என்னும் சொல் பரிபாஷை என்பதற்குக் குழூஉக் குறியாக இதன் கீழ்வரும் சில மந்திர, வாசக, பத, வர்ணாதிகளை உணர்க. காரண மாத்திரமாய் விளங்கா நின்ற விந்து நாத முதலியனவும், காரிய காரண மாத்திரமாய் விளங்கா நின்ற அம், அங், சிங், மங், சிவா,வசி,ஓம் முதலியவும், காரியகாரன் மாத்திரமாய் விளங்கா நின்ற ஹரி, சச்சிதானந்தம், பரிபூரணம், ஜோதியுட் ஜோதி, சிவயவசி, சிவயநம, நமசிவய, நாராயணாயநம, சரவணபவாயநம முதலியவும் இவ்வண்ணம் குறித்த பரிபாஷைகளின் உண்மை ஆன்ம அனுபவத்திலும், வகர தகர வித்தையிலும் விளங்கும்.

மேலும், மேற்குறித்த வண்ணம் தத்துவங்களை உபா சித்தும், அர்ச்சித்தும், தத்துவ அதீதாதீதத்தைத் தியானித்தும், இடையில் ஜபித்தும், கரண லயமாகச் சமாதிசெய்தும், தத்துவச் சேட்டைகளை அடக்க விரத மிருந்தும், சாதாரண யோகபாகத்தில் மூச்சடக்கியும்

Koviloor Digital Library

சாதகர்கள் மேற் குறித்த வண்ணம் செய்வார்கள். சாத்தியர்கட்கே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டைகூடல் என்னும் நான்கும் கடந்து அவர்கள் ஆரூடராக நிற்பதால் சாதனம் ஒன்றும் வேண்டுவதில்லை. மேற்படி சாத்தியர்களே சுத்ததேகிகள். அவர்கள் அனுபவத்தை விரிக்கில் பெருகும்.

பரிபாஷையும் சுத்த சன்மார்க்கமும்

பரிபாஷை **அங், சிங், வங், பங், அம், விந்து, நாதம், சிவ, வசி, ஓம்,அரி, அர, சத்து, சித்து, ஆனந்தம், பரிபூரணம், ஜோதி, சிவயவசி, சிவாயநம, நமசிவாய, ஆ, ஈ, ஊ, ஐ, நாராயணாயநம, சிவோகம், சோகம்** முதலியவாகச் சமயமதங்களில் குறிக்கப்பட்ட மந்திர தந்திர ரகசிய வாசக வாச்சிய வசன அக்ஷர தத்துவ பவதிக முதலியவையும் பரிபாஷையாம். மேற்குறித்த வண்ணம் ஜபித்தும், தியானித்தும், அர்ச்சித்தும், உபாசித்தும், சமாதிசெய்தும், சுவாசத்தை அடக்கியும், விரதமிருந்தும், இவை போன்ற வேறு வகைத் தொழிற்பட்டும் பிரயாசையெடுப்பது வியர்த்தம், சுத்த சன்மார்க்கமே சிறந்தது. பாவனாதீதாதீதம் ஆகிய சுத்த சன்மார்க்கப் பொருளாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரால் இதனது உண்மைகள் இனி வெளிப்படும்.

3. சாத்திய நிலை

சுத்த சன்மார்க்கம் ஒன்றுக்கே சாத்தியம் கைகூடும் என்றும் சாகாத நிலையைப் பெற்றுச் சர்வ சித்தி வல்லபமும் பெறக்கூடும். மற்றச் சமய மத மார்க்கங்களெல்லாம் சுத்த சன்மார்க்கத்துக்குச் செல்லக் கீழ்ப்படிகளாதலால், அவற்றில் ஐக்கியம் என்பதே இல்லை. தாயுமானவர் முதலானவர்கள் சுத்த சன்மார்க்கிகள் அல்லர்; மத சன்மார்க்கிகள் என்று ஒருவாறு சொல்லலாம். இதில் நித்திய தேகம் கிடையாது. இது சாதக மார்க்கமே அன்றிச் சாத்தியமல்ல. நாளைச் சுத்த சன்மார்க்கம் வழங்கும்போது இவர்கள் யாவரும் உயிர்பெற்று மீள வருவார்கள். முன்னிருந்த அளவைக் காட்டிலும் விசேஷ ஞானத்தோடு சுத்த சன்மார்க்கத்துக்கு உரியவர்களாய் வருவார்கள், சாத்தியர்களாய் இரண்டறக் கலப்பார்கள்.

4. சுத்த சன்மார்க்கக் கொள்கை

சர்வ சித்தியையுடைய தனித்தலைமைப் பதியாகிய ஆண்டவரை நோக்கி அணுக்கள் - தபசு செய்து சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களையும் பெற்றுக் கொண்ட மூர்த்திகளாகியவர். ஒரு தொழிலுடைய பிரம்மாவும், இரண்டு சித்தியுடைய விஷ்ணுவும்,

Koviloor Digital Library

மூன்று சித்தியுடைய ருத்திரனும் இதுபோன்ற மற்றையர்களும். மேற்குறித்த மூவரால் ஏற்படுத்திய தத்துவசித்திக் கற்பனைகளாகிய சமய மதமார்க்கங்களை அனுஷ்டித்து, அவர்களையே கர்த்தாக்களாக வணங்கி வழிபாடு செய்துவருகின்ற இது வரையிலுமுள்ள அணுக்கள் மேற்குறித்தவர்களது பதப்பிராப்தியை - மேற்படி அணுக்கள் - லேசம் பெற்றுக் கொண்டார்கள். ஆதலால் இவர்களை அசைப்பித்து அனுக்கிரகிக்கும் சர்வ சித்தியையுடைய தனித்தலைமைக் கடவுளின் சித்தியின் லேசங்கள் இவர்களுக்குள. ஆதலால் இவர்கள் அந்தச் சர்வ சித்தியையுடைய கடவுளுக்கு கோடி கோடிப்பங்கு தாழ்ந்த தரத்திலிருக்கின்றார்கள். ஆகவே சமயத் தேவர்களை வழிபாடு செய்வது அவசியமல்ல. மேற்குறித்தவர்கள் அற்ப சித்தியைப் பெற்று, அதில் மகிழ்ந்து அகங்கரித்து மேல் படிகள் ஏற வேண்டியவைகளை ஏறிப் பூரண சித்தியை அடையாமல் தடைப்பட்டு நிற்றல்போல, இங்கு மற்றவைகளை உன்னி அவலமடைந்து நில்லாமல், **சர்வ சித்தியுடைய கடவுள் ஒருவருண்டென்று, அவரை உண்மை அன்பால் வழிபாடு செய்து, பூரண சித்தியைப் பெற வேண்டுவது சன்மார்க்கக் கொள்கை.** மேலும், தனித்தலைவன் லக்ஷியந் தவிர அநித்திய சடதுக்காதிகளைப் பொருட்படுத்தி உபாசனாதி மார்க்கமாய் வழிபடுவது கொள்கை அல்ல, உபாசனை முதலியவற்றால் வழிபடுதலும் மேற்குறித்த தலைவனைக் குறித்ததே தவிர வேறில்லை.

இதற்குப் பிரமாணம் : சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் என்னும் திருஅருட்பாசுரத் திருஉள்ளக் கிடையானும், அறங்குலவு தோழி இங்கே என்னும் அருட்பாசுர உள்ளக் கிடையானும் பெரும்பதி தெரிவித்தார். இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்; எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள் என்ற திருவார்த்தையதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாக உடையது கடமை.

5. சன்மார்க்கக் கொள்கை

சர்வசித்தியையுடைய தனித்தலைமைப் பதியாகிய ஆண்டவரை வேண்டித் தபசுசெய்து சிருட்டிக்குஞ் சித்தியைப் பெற்றுக் கொண்டவன் பிரமன் ; சிருட்டி, திதி, ஆகிய சித்தியைப் பெற்றுக் கொண்டவன் விஷ்ணு ; சிருட்டி, திதி, சங்காரம் ஆகிய சித்தியைப் பெற்றுக் கொண்டவன் ருத்திரன். இவர்கள் ஏற்படுத்திய சமய மார்க்கங்களை அனுட்டிக்கின்றவர்கள் இவர்களை அந்தந்தச் சமயங்களுக்குத் தெய்வங்களாக வணங்கி வழிபாடு செய்து வந்தார்கள்.

Koviloor Digital Library

இம்மூர்த்திகளுடைய சித்திகள் சர்வசித்தியையுடைய கடவுள் சித்தியின் இலேசங்கள்; அதில் ஏகதேசம்கூட அல்ல. ஆகையால், இவர்கள் அந்தச் சர்வசித்தியையுடைய கடவுளுக்கு ஒப்பாகார்கள்; கோடி கோடிப் பங்கு தாழ்ந்த தரத்தில் இருக்கின்றார்கள். ஆகையால், சமயத் தெய்வங்களை வழிபாடு செய்து, அந்தச் சமயத் தெய்வங்களிடம் பெற்றுக்கொண்ட அற்ப சித்தியில் அவர்கள் மயங்கி மகிழ்ந்து அகங்கரித்து மேலேறவேண்டிய படிகளெல்லாம் ஏறிப் பூரண சித்தியை அடையாமல் தடைப்பட்டு நிற்றல்போல் நில்லாமல், சர்வ சித்தியையுடைய கடவுளொருவர் உண்டென்றும், அவரை உண்மையன்பால் வழிபாடு செய்து பூரண சித்தியைப் பெற வேண்டுவது சன்மார்க்க சங்கத்தவர்களுடைய கொள்கை. இதை ஆண்டவர் தெரிவித்தார்.

6. சுத்த சன்மார்க்க முடிபு

சுத்த சன்மார்க்கத்தின் முடிபு சாகாத கல்வியைத் தெரிவிப்பதேயன்றி வேறில்லை. சாகின்றவன் சன்மார்க்க நிலையைப் பெற்றவனல்லன். சாகாதவனே சன்மார்க்கி.

7. சாகாத கல்வி

தேவர் (திருவள்ளுவர்) குறளில் முதல் அதிகாரத்தில் சாகாத கல்வியைக் குறித்துச் சொல்லியிருக்கின்றது. அதைத் தக்க ஆசிரியர் மூலமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

8. சாகாக் கல்விக்கு ஏது

தூக்கத்தை ஒழித்தால் ஆயுள் விருத்தியாகும். ஒருவன் ஒரு நாளைக்கு இரண்டரை நாழிகை தூங்கப் பழக்கஞ் செய்வானானால், அவன் ஆயிரம் வருடஞ் சீவித்திருப்பான். எப்போதும் மறப்பில்லாமல் ஆசானுடைய திருவடியை ஞாபகஞ் செய்துகொண்டிருப்பதே சாகாத கல்விக்கு ஏதுவாம்.

9. சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடைகள்

சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய தடைகளாகிய சமயம் மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கை விட்டவர்களும், காமக் குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவரும், கொலை புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள் தான் சுத்த சன்மார்க்கத்துக்கு உரியவர்கள் ஆவார்கள். மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் இவை முதலியவைகளைத் தவிர்த்துக் கொள்வார்கள். அதாவது, செயற்கையாகிய குணங்களை

Koviloor Digital Library

நன்முயற்சியால் தடுத்துக் கொள்பவர்களுக்குக் கேவலாதிகார மரணம் நீங்கும். அப்படி இல்லாது இவ்விடம் காத்திருப்பவர்கள் மரணத்தைத் தவிர்த்துக்கொள்ள மாட்டார்கள். அருள் விளங்குங் காலத்தில் அவரவர்கள் பரிபாகத்துக்குத் தக்கதாக இகலோக போகத்தை மட்டும் அனுபவிக்கக் கூடும்; பரலோக போகமாகிய ஞானசித்திகளைப் பெறமாட்டார்கள்.

10. சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம்

புருஷார்த்தம்

நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு. அவையாவன :

1. ஏமசித்தி செய்தல்.
2. சாகாக்கல்வி கற்றல்.
3. தத்துவநிக்கிரகம் செய்தல்.
4. கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல்.

ஒழுக்கம்

இவை பெறுவதற்கு ஒழுக்கம் நான்கு. அவையாவன :

1. இந்திரிய ஒழுக்கம்
2. கரண ஒழுக்கம்
3. ஜீவ ஒழுக்கம்
4. ஆன்ம ஒழுக்கம்

(1) இந்திரிய ஒழுக்கம்

1. கொடிய சொல் செவிபுகாது நாத முதலிய ஸ்தோத்திரங்களைக் கேட்டல்
2. அசுத்த பரிசமில்லாது தயாவண்ணமாகப் பரிசித்தல்;
3. குரூரமாகப் பாராதிருத்தல்;
4. உருசி (சுவை) விரும்பாதிருத்தல்:
5. சுகந்தம் விரும்பாதிருத்தல்;
6. இன்சொல்லாடல்;
7. பொய் சொல்லாதிருத்தல்;
8. ஜீவஹிம்சை நேரிடும் காலத்தில் எவ்விதத் தந்திரத்தினால் ஆவது தடை செய்தல்;

Koviloor Digital Library

9. பெரியோர்கள் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்குச் செல்லுதல்
10. ஜீவ உபகார நிமித்தமாய் சாதுக்கள் வாசஸ்தலங்களிலும் திவ்ய திருப்பதிகளிலும் சஞ்சரித்தல்;
11. நன்முயற்சியில் கொடுத்தல் எடுத்தலாதி செய்தல்;
12. மித ஆகாரம் செய்தல்;
13. மித போகம் செய்தல்;
14. மலஜல உபாதிகளை அக்கிரமம், அதிக்கிரமம் இன்றிக் கிரமத்தில் நிற்கச் செய்வித்தல்;
15. கால பேதத்தாலும் உஷ்ண ஆபாசத்தாலும் தடை நேர்ந்தால், ஔஷதி வகைகளாலும், பௌதிக மூலங்களாலும், சரபேத, அஸ்தபரிச தந்திரத்தாலும், மூலாங்கப் பிரணவத் தியான சங்கற்பத்தாலும் தடை தவிர்த்துக் கொள்ளல்;
16. மந்ததரம் : சுக்கிலத்தை அக்கிரம அதிக்கிரமத்தில் விடாது நிற்றல்.
17. தீவிரதரம் : எவ்வகையிலும் சுக்கிலம் வெளிப்படாமல் நிறுத்தல்
18. இடைவிடாது கோசத்தைக் கவசத்தால் மறைத்தல்;
19. இதுபோல் உச்சி, மார்பு முதலிய அங்கங்களையும் மறைத்தல்;
20. சஞ்சரிக்கும் காலத்தில் காலில் கவசம் தரித்தல்;
21. அழுக்காடை உடுத்தாதிருத்தல் முதலியன இந்திரிய ஒழுக்கமாம்

(2) கரண ஒழுக்கம்

1. மனதைச் சிற்சபை இடத்தே நிறுத்தல் முதலில் புருவ மத்தியில் நிற்கச் செய்தல்;
2. துர்விஷயத்தைப் பற்றாது இருக்கச் செய்தல்;
3. பிறர்குற்றம் விசாரியாது இருத்தல்;
4. பிறர் மீது கோபியாதிருத்தல்;
5. தன்னை மதியாதிருத்தல்;
6. இராகாதி நீக்கி இயற்கைச் சத்துவ மயமாதல்;
7. தனது தத்துவங்களை அக்கிரமத்தில் செல்லாது கண்டித்தல் முதலியன கரண ஒழுக்கமாம்.

(3) ஜீவ ஒழுக்கம்

ஆண்மக்கள் பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்திலும், ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர

Koviloor Digital Library

சம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி, எல்லவரும் தம்மவர்களாய்ச் சமத்தில் கொள்ளுவது ஜீவ ஒழுக்கமாம்.

(4) ஆன்ம ஒழுக்கம்

யானை முதல் எறும்பு வரை தோன்றிய சரீரங்களில் உள்ள ஆன்மாவே திருச்சபையாகவும், அதன் உள் ஒளியே பதியாகவும் யாதும் நீக்கமறக் கண்டு எவ்விடத்தும் பேதமற்று எல்லாம் தானாக நிற்றல் ஆன்ம ஒழுக்கமாம். இவ்வண்ணம் நின்றால் மேற்குறித்த அரும் புருஷார்த்தம் கைகூடும்.

ஒருமை என்பது : தனது அறிவு ஒழுக்கம் ஒத்த இடத்தில், தானே கூடும்; மற்ற இடத்தில், தன்னால் இதரர்களுக்கு இம்சை இல்லாது அவர்கள் செய்யினும்தான் சகித்து அடங்கி நிற்பது.

11. சுத்த சன்மார்க்க சாதனம்

(பரோபகாரம், சத்விசாரம்)

பரோபகாரம் என்பது யாது? தேகத்தாலும், கரணத்தாலும், இந்திரியத்தாலும், திரவியத்தாலும் ஆன்மாக்களுக்கு உபகரித்தல், திரவியம் நேராத பட்சத்தில், திரிகரண சுத்தியாய் ஆன்மநேய சம்பந்தமான தயா விசாரத்தோடு எல்லாச் சீவர்களினது வாட்டத்தைக் குறித்தும் பிரார்த்தித்தல். **சத்விசாரம்** என்பது கடவுளினது புகழையும் ஆன்மாவின் தரத்தையும் நமது சிறுமையையும் கடவுளின் தரத்தையும் இடைவிடாது விசாரித்து, நமது குறையெல்லாம் கடவுளின் திருவடியில் விண்ணப்பிப்பது. சிவானுபவமாகிய தேகத்திரயம் பெறுவதற்கு மேற்குறித்த இரண்டு மார்க்கம் தவிர வேறில்லை. மேலும் தயவு என்பது இரண்டு வகைப்படும். யாதெனில் கடவுள் தயை, ஜீவதயை, **கடவுள் தயை** என்பது இறந்த உயிரை எழுப்புதல், தாவரங்களுக்கு மழை பெய்வித்தல், மிருக பட்சி ஊர்வன வாதிகளுக்கு ஆகாரம் நிதியின்படி அருட்சத்தியால் ஊட்டிவைத்தல், சோம சூரிய அக்கினிப் பிரகாசங்களைக் கால தேச வண்ணம் பிரகாசஞ் செய்வித்தல், பக்குவிகளுக்கு அனுக்கிரகித்தல், அபக்குவிகளைச் செய்ய வேண்டிய அருள் நியதியின்படி தண்டனை செய்வித்துப் பக்குவம் வருவித்தல். **ஜீவதயை** என்பது தன் சத்தியின் அளவு உயிர்க்கு உபகரித்தல் அல்லது ஆன்மநேய சம்பந்தம் பற்றித் தயாவடிவமாய் இருத்தல்.

Koviloor Digital Library

சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய சாதனம் என்ன என்றால்: எல்லா ஜீவர்களிடத்தும் தயவும் ஆண்டவரிடத்து அன்புமே முக்கியமானவை உதாரணம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் சொல்லியது: **கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக. மற்றெல்லாம் மருள்நெறியே.**

12. சன்மார்க்க சாதனம்

சாதனங்கள் ஒன்றும் வேண்டாம். ஏதாவது ஓர் சாதனம் சொல்லக்கேட்டு அதன்படி நடந்தால் சிறு ஒளி உண்டாம். அதைக் கண்டு பல்லிளித்து இறுமாந்து கெட நேரிடும். ஆதலால், காலம் தாழ்த்தாது எல்லா உயிரையும் தன்னுயிரைப் போலப் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவே சாதனம். இந்தக் குணம் வந்தவன் எவனோ அவன்தான் இறந்தவரை எழுப்புகின்றவன்; அவனே ஆண்டவனுமாவான்.

13. சுத்த சன்மார்க்கப் பிரார்த்தனை

ஒருவன் பிரார்த்தனை செய்வதில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல. இந்த உலகம் எல்லாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால், அதில் ஒருவனுக்கு வேண்டியவை எல்லாம் அடங்கி விடுகின்றன. பிரார்த்தனை செய்ய வேண்டுமாகில் இப்படித்தான் செய்யவேண்டும்.

பாதி இரவில் எழுந்தருளிப் பாவி யேனை எழுப்பி அருட்
ஜோதி அளித்தென் உள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடஞ்செய் பேரின்ப நிதிநான் பெற்ற நெடும் பேற்றை
ஓதி முடியாது என்போல் இவ் வுலகம் பெறுதல் வேண்டுவனே.

(திருஅருட்பா ஆறாம் திருமுறை (3734)

என்பதே என் பிரார்த்தனையாகும்.

14. சுத்த சன்மார்க்க சத்திய ஞானாசாரம்

ஜீவகாருண்யத்தால் பிரமன் ஆயுசும், பாச வைராக்கியத்தால் விஷ்ணு ஆயுசும், ஈசுவர பக்தியால் ருத்திரன் ஆயுசும், பிரம்ம ஞானத்தால் என்றும் அழியாத சுவர்ணதேகம் முதலியவைகளைப் பெற்றுக் கடவுள் மயமாகலாம். எப்படியெனில்: கடவுள் சர்வ ஜீவதயாபரன், சர்வ வல்லமையுடையவன்; ஆகையால், நம்மையும் சர்வஜீவதயை உடையவர்களாய்ச் சர்வ வல்லமையையும் பெற்றுக்

Koviloor Digital Library

கொள்ளும்படி மனித தேகத்தில் வருவித்தார். ஞானிக்குத் தயவு அதிகப்பட்டு இருக்கிறபடியால், கேளாத கேள்வி முதலிய மஹா அற்புதங்களான இறந்தாரெழுதல் முதலிய அற்புத வல்லமையைப் பெற்றிருக்கின்றார். எந்த ஜீவர்களிடத்தில் தயாவிருத்தியாகிய அருள் விசேஷம் விளங்குகின்றதோ, அந்த ஜீவர்களிடத்தில் கடவுள் விளக்கம் விசேஷமாய் இருக்கும், மற்றவர்களிடத்தில் காரியப்படாது. ஆதலால் மலஜல சங்கல்ப காலங்களைத் தவிர மற்றக் காலங்களில், கடவுளிடத்தில் அன்பும் ஜீவர்களிடத்தில் பக்தியும் செலுத்த வேண்டும். ஆதலால் பக்தி என்பது மனநெகிழ்ச்சி, மனவுருக்கம். அன்பு என்பது ஆன்ம நெகிழ்ச்சி, ஆன்மவுருக்கம். எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருப்பதை அறிதலே ஈசுவர பக்தியாம். அந்தக் கரண சுத்தியின் பிரயோசனம் பக்தியை விளைவிப்பது. ஜீவகாருணியம் உண்டானால் அருளுண்டாகும், அருளுண்டானால் அன்புண்டாகும், அன்புண்டானால் சிவானுபவம் உண்டாகும். தத்துவவொழுக்கம் பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தொழிலொழுக்கம் பற்றி ஜாதிகள், ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு ஜாதி ஏற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள். அவையாவன: ஜாதி ஆசாரம், குல ஆசாரம், ஆசிரம ஆசாரம், லோக ஆசாரம், தேச ஆசாரம், கிரிய ஆசாரம், சமய ஆசாரம், மத ஆசாரம், மரபு ஆசாரம், கலாசாரம், சாதனாசாரம், அந்த ஆசாரம், சாஸ்திர ஆசாரம் முதலிய ஆசாரங்கள். ஆதலால் மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து, சுத்த சன்மார்க்க சத்திய ஞான ஆசாரத்தை வழங்கிப் பொதுநோக்கம் வந்தால், மேற்படி காருணியம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெற்று, அனந்த சித்தி முத்திகளைப் பெறக்கூடுமே அல்லது, இல்லாவிடில் கூடாது.

15. சன்மார்க்க ஆகாரம்

நெய், பால், தயிர், மோர் இவைகளை ஆகாரத்தில் விசேஷம் சேர்ப்பது தேக நஷ்டம். மனிதர்களுக்கு எல்லாத் தாதுக்களிலும் முதல் தாது கொழுப்பு அதன் சத்து நெய். அதை எடுத்தால் தேக நஷ்டம். இதுபோல் பசுக்களினது முதற்றாது நெய் ஆதலால் அதை எடுப்பது சுத்த சன்மார்க்க மரபல்ல. சன்மார்க்கத்தில் தேகவிருத்தி செய்து கொள்வதற்காவது புறப்புற வமுதம். ஆதலால், மழைநீர், ஊற்றுநீர் பொற்றலைக் கரிசலாங்கண்ணி வாழை தென்னை முதலியவற்றின் மேல் பெய்கின்ற பனிசலம் மழைச்சலம் இவைகள் தான் சுத்த சலம் அல்லது அமுதம். அல்லது சாதாரண ஜலமும் கொள்ளலாம். அதாவது மேற் குறித்த ஜலத்தை 5-ல் 3 பாகம் சுண்ட 5-ல் 2 பாகம் நிற்கக் காய்ச்சி,

Koviloor Digital Library

சர்க்கரை வெல்லம் இவைகளைச் சேர்த்துக் குடிக்கலாம். இவைகள் தேகவிருத்தி செய்யும். சுத்த சன்மார்க்க மரபிற் குரியது இனிப்புத்தான். ஆதலால் தேன், சர்க்கரை, கற்கண்டு, வெல்லம் இவைகளை ஆகாரத்தில் சேர்த்துக் கொள்வது உத்தமம்.

16. சுத்த சன்மார்க்க ஆகாரம்

சுத்த சன்மார்க்க சாதகர்கள் எக்காலத்தும் புழுக்காதிருக்கின்ற வஸ்துவைக் கொள்ளல் வேண்டும். புழுக்காத வஸ்துக்கள் யாதெனில்;- சர்க்கரை, தேன், கற்கண்டு, வெல்லம், அயம் முதலிய செந்தூரம், தாமிர முதலிய பஸ்மம். ஆதலால் அவசியம் ஆகாரத்திற்கு முக்கிய வஸ்து மேற்குறித்தவை. பரியாயத்தில் (குறிப்பாக) சர்க்கரையென்று லவணத்தை (உப்பு) என்று சொல்வதும் உண்டு. மேற்படி லவணத்தைத் துரிசு போக்கி ஐய லவணமாய்க் கட்டி ஆகாரத்தில் கொண்டால் தேகம் நீடிக்கும். இதன்றி, சுத்த சத்வ பதார்த்தத்தில் லவணம் சிறுகச் சேர்த்துக் கொள்ளவும் கூடும்.

17. சர்க்கரை

சர்க்கரை எந்தக் காலத்திலும் புழுக்காது; ஆகலின் உத்தம ஆகாரமாம். மற்ற வஸ்துக்கள் எல்லாம் புழுக்கும்.

18. கரிசலாங்கண்ணியும் தூதுளையும்

கரிசாலையை தினந்தோறும் பச்சையாகவாவது சமையல் செய்தல் முதலிய வகையாலாவது சாப்பிட்டு வரவேண்டும். பிரதம உள்ளுடம்பை நீடிக்கப் பண்ணும். மேற் குறித்த மூலிகையை அலக்ஷியம் செய்யாது ஆசாரியன் திருவடியின் கண்ணே இலக்ஷியம் வைத்து, எவ்வித தந்திரத்தினாலாவது தினம் தினம் உட்கொண்டால், தேகக் கெடுதியாகிய அசுத்தம் நீங்கி, தேகம் வலுவுள்ளதாய் நெடுநாளைக்கு இருக்கும். முத்தியடைவதற்கு சகாயமாயும் இருக்கும். மகான்கள் இடத்தில் அனந்த காலம் காத்து இருந்தாலும் மேற் குறித்த மூலிகையின் பிரயோஜனத்தையும் உண்மையையும் அனுபவத்தையும் வெளியிடார்கள். பரம கருணாநிதியாகிய நம் தலைவனால் கிடைத்தது. அசட்டையின்றி உட்கொள்ளல் வேண்டும். மேற் குறித்த மூலிகை ஜலம் இல்லாத இடத்தில் இருக்கின்றது விசேஷ நன்று. ஜலமுள்ள இடத்திலுள்ளதில் காரமிராது. தந்தசுத்தி செய்து அண்ணாக்கில் தர்ஜனி விரலால் தேய்க்க மேற்குறித்த மூலிகையால் பித்தநீர் வெளியாகி, கண்ணொளி விசேஷிக்கும் நேராத பட்சத்தில்

Koviloor Digital Library

பொற்றலைக் கையாந்தகரை கூடும். மேற் குறித்த மூலிகை செந்தூரம் செய்வதற்குச் சிறந்தது. உலர்த்திக் குழித்தயிலம் வாங்கியும் செந்தூரம் செய்யலாம். அது போலவே, அறிவை விளக்குவதற்கும், கவனசத்தி உண்டுபண்ணுவதற்கும், கரணம் ஒய்வதற்கும், கபத்தை அரிப்பதற்கும் யோக்கியதை உடைய ஒளஷதி தூதுளை. அதை மேற்குறித்தபடி அனுஷ்டித்தால் விசேஷ நன்மை செய்யும், கரிசாலை தந்த சுத்தியால் வசீகரமும் நேரிடும் உண்மை.

19. சுத்த சன்மார்க்க அனுபவ ஸ்தானங்கள்

சுத்த சன்மார்க்கத்துக்கு அனுபவ ஸ்தானங்கள் கண்டத்துக்கு மேல்

20. திருவருண் மெய்ம்மொழி

சமரச சுத்த சன்மார்க்கப் பெருநெறியின் ஒழுக்கங்களைக் குறிக்கும் அருட்பிரகாசத் தந்தையார் திருவருண் மெய்ம்மொழி

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப் பெற்ற நண்பர்களனைவரும் நாமும் அறியவேண்டுவதும் ஒழுக வேண்டுவதும் யாதெனில்

இயற்கையிற்றானே விளங்குகின்றவராய் உள்ளவரென்றும், இயற்கையிற்றானே உள்ளவராய் விளங்குகின்றவரென்றும், இரண்டு படாத பூரண இன்பமானவரென்றும், எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லா பதங்களையும், எல்லாச் சத்திகளையும், எல்லாச் சத்தர்களையும், எல்லாக் கலைகளையும், எல்லாப் பொருள்களையும், எல்லாத் தத்துவங்களையும், எல்லா தத்துவிகளையும், எல்லா உயிர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லா இச்சைகளையும், எல்லா ஞானங்களையும், எல்லாப் பயன்களையும், எல்லா அனுபவங்களையும், மற்றை எல்லாவற்றையும் தமது திருவருட் சத்தியால் தோற்றுவிக்கின்றவரென்றும், எல்லாம் ஆனவரென்றும், ஒன்றும் அல்லாதவரென்றும், சர்வகாருண்ய ரென்றும், சர்வவல்லபரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்பு உயர்வு இல்லா தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதியர் என்றும் சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே, அகம் புறம் முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றிநிறைந்தசுத்தமெய்யறிவுஎன்னும்பூரணப்பொதுவெளியில், அறிவாரறியும் வண்ணங்களெல்லாமாகி விளங்குகின்றார்.

Koviloor Digital Library

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரேயாகிய கடவுளை இவ்வுலகினிடத்தே ஜீவர்களாகிய நாம் அறிந்து அன்புசெய்து அருளையடைந்து அழிவில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பல்வேறு கற்பனைகளாற் பலவேறு சமயங்களிலும் பலவேறு லஷியங்களைக் கொண்டு, நெடுங்காலம் பிறந்து பிறந்து, அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவுமின்றி விரைந்து விரைந்து பல்வேறு ஆபத்துகளினால் துன்பத்திலழுந்தி இறந்து இறந்து வீண் போயினோம், வீண்போகின்றோம்.

ஆதலால், இனிமேலும் ஜீவர்களாகிய நாம் விரைந்து விரைந்து இறந்து இறந்து வீண்போகாமல் உண்மை அறிவு, உண்மை அன்பு, உண்மை இரக்கம் முதலிய சுபகுணங்களைப் பெற்று, நற்செய்கை உடையவர்களாய், (எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும், உண்மைப் பொது நெறியாகி விளங்கும் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்றுப் பேரின்பசித்திப் பெருவாழ்வில் பெருஞ்சுகத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு மேற்குறித்த உண்மைக்கடவுள் தாமே திருவுள்ளங் கொண்டுசுத்தசன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய உண்மை விளக்கஞ் செய்கின்ற ஓர் ஞானசபையைச் சித்திவளாகம் என்னும் இச்சந்நிதானத்திற்கடுத்த உத்தரஞானசிதம்பரம் அல்லது ஞானசித்திபுரம் என்று குறிக்கப்படுகின்ற வடலூர் பார்வதிபுரத்தில் தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து,

இக்காலந்தொடங்கிஅளவுகுறிக்கப்படாதநெடுங்காலம்அற்புத சித்திகள் எல்லாம் விளங்க யாமே அமர்ந்தருளித் திருவிளையாடல் செய்தருள்கின்றாம்" என்னும் திருக்குறிப்பை இவ்விடத்தே தாயினுஞ் சிறந்த பெருந்தயவுடைய நமது கருணையங்கடலாராகிய அருமைத்தந்தையார் அருட்பிரகாச வள்ளலார் முன்னிலையாகப் பலவாற்றானும் பிரசித்தப்பட வெளிப்படுத்தி அருட்பெருஞ்ஜோதி சொரூபராய் அப்பெருங்கருணை வள்ளலாரது உடல் பொருள் ஆவிகளைக் கொண்டு பொற்சபை சிற்சபைப் பிரவேசஞ் செய்வித்தருளி,

அரிய அவரது திருமேனியில் தாம் கனிவுறக் கலந்தருளிய எல்லாம் வல்லசித்தித் திருக்கோலங்கொண்டு, அருளர சாட்டிச் திருமுடி பொறுத்தி அருள் விளையாடல் செய்தருளும் நிமித்தம், ஈரேழு பதினான்கு உலகங்களிலுள்ளவர்கள் யாவரும் ஒருங்கே, இஃது என்னை! இஃது என்னை! என்று அதிசயிக்கும்படி வெளிப்பட எழுந்தருளும் தருணம் அடுத்த அதிசமீபித்த தருணமாய்

Koviloor Digital Library

இருத்தலினால் அங்ஙனம் வெளிப்படுந் திருவரவு பற்றி எதிர்பார்த்தலாகிய விரதங் காத்தலில் நிற்கும் அல்லது நிற்கவேண்டிய நாம் எல்லவரும் மேற்குறித்த அசிந்திய அற்புதத் திருவரவு நேரிட்ட கணத்திற்றானே,

சுத்தசன்மார்க்க அரும் புருஷார்த்தங்களின் பெரும் பயன்களாகிய எக்காலத்தும் நாசமடையாத சுத்த அல்லது சுவர்ண தேகம்,பிரணவ தேகம், ஞான தேகம் என்றும் சாகாக்கலானுபவ சொரூப சித்தித் தேகங்களும் தன் சுதந்தரத்தால் தத்துவங்கள் எல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப்பெரு வல்லபமும், கடவுள் ஒருவரே என்றறிகின்ற உண்மை ஞானமும், கருமசித்தி, யோக சித்தி, ஞானசித்தி முதலிய எல்லாச் சித்திகளும் பெறுகின்ற அருட்பேறும் பெற்று வாழ்கின்ற பேரின்ப சித்திப் பெருவாழ்வை அடைவதற்கான சுத்தசன்மார்க்கத் தனிப்பெரு நெறியைப் பற்றுவதற்குரிய உண்மை ஒழுக்கங்களில் நாமெல்லவரும் தனித்தனி ஒழுக வேண்டுவது அவசியமாகலில், அவ்வொழுக்கங்கள் இவை என உணர வேண்டுவது.

சன்மார்க்கப் பெருநெறியின் ஒழுக்கங்கள் **இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம்** என நான்கு வகைப்படும்.

அவற்றும் இந்திரிய ஒழுக்கம் என்பது நாத முதலிய ஸ்தோத்திரங்களை உற்றுக்கேட்டல், மற்றவை கேளாதிருத்தல், கொடுஞ்சொல் முதலியவை செவிபுகாமல் நிற்றல், அசுத்தங்களைத் தீண்டாதிருத்தல், கொடூரமாகப் பாராதிருத்தல், ருசியின்மீது விருப்பமின்றியிருத்தல், சுகந்தம் விரும்பாதிருத்தல் என்னும் ஞானேந்திரிய ஒழுக்கமும்; இனிய வார்த்தையாடுதல், பொய் சொல்லாதிருத்தல், ஜீவஹிம்சை நேரிடுங்கால் எவ்விதத் தந்திரத்திலாவது தடைசெய்தல்,

பெரியோரிடத்திற் செல்லுதல், என்றால் சாதுக்களிடம் பரிச்சயம் பண்ணுதல் உயிர்க்கு உபகரிக்கும் நிமித்தம் சஞ்சரித்தல், உயிர்க்கு உபகார நிமித்தம் கையால் உபகரித்தல், மலஜல உபாதைகள் அளவு மீறாமலும் கிரமங் குறையாலும் அளவைபோல் தந்திர ஓஷதிகளாலும் ஆகாரப் பக்குவத்தாலும் பவுதிகப் பக்குவத்தாலும் செய்வித்தல் என்னும் கருமேந்திரிய ஒழுக்கமும் ஆகும்.

கரண ஒழுக்கம் என்பது சிற்சபையின்கண் மனதைச் செலுத்துவது தவிர மற்றெந்தவகை ஆபாசத்திலும் செலுத்தாமல் இழுத்து மேற்குறித்த இடத்தில் நிறுத்துதல், பிறர் குற்றம் விசாரியாதிருத்தல்,

Koviloor Digital Library

தன்னை மதியாதிருத்தல், செயற்கைக் குணங்களாலுண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவ மயமாயிருத்தல், பிறர்மேல் கோபியாதிருத்தல், தனது சத்ருக்களாகிய தத்துவங்களைக் கோபித்தல், அக்கிரம அதிக்கிரமப் புணர்ச்சி செய்யாதிருத்தல் முதலியவாம்.

ஜீவ ஒழுக்கம் என்பது எல்லா மனிதரிடத்தும் ஜாதி, சமயம், குலம், கோத்திரம், சூத்திரம், சாத்திரம், தேசம், மார்க்கம், உயர்வு, தாழ்வு முதலிய பேதமற்றுத் தானாக நிற்றல் முதலியவாம்.

ஆன்ம ஒழுக்கம் என்பது எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிடத்துமுள்ள ஆன்மாக்களிடத்து இரங்கி, ஆன்மாவே சபையாகவும் அதனுள்ளொளியே பதியாகவும் கண்டு கலந்து பூரணமாக நிற்றல் முதலியவாம்.

இங்ஙனம் கூறிய ஒழுக்கங்களுள்ளே இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம் என்னுமிவற்றை நாம் ஒவ்வொருவரும் உண்மை உணர்ச்சியுடன் மேற்கொண்டு ஒழுகவேண்டும்; ஜீவ ஒழுக்கம் ஆன்ம ஒழுக்கம் என்னும் இரு வகையான அரிய ஒழுக்கங்கள் திருவருட்டுணை பெற்ற பின்னரன்றிக் கைகூடா. ஆதலால் அவ்வொழுக்கங்களைப் பெற்று ஒழுக வேண்டுவதற்குமான நன்முயற்சிகளில் பழகவேண்டும்.

அன்றியும் :-

இவ்வண்ணமான ஒழுக்கங்களில் இயன்ற மட்டில் ஒழுகப்பெற்று, இடந்தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், தெய்வம் பராவல், பிறவுயிர்க்கிரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப்பணிதல், பத்தி செய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில் பலகால் முயன்று முயன்று பழகிப் பழகி இருத்தல் வேண்டும்.

அன்றியும் :-

சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும் அச்சமயங்களிற் குறித்த சாதனங்களும் தெய்வங்களும் கதிகளும் தத்துவசித்தி விகற்ப பேதங்களென்றும், அவ்வச்சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள், ஆகமங்கள், சாத்திரங்கள், புராணங்கள் முதலிய கலைகள் எல்லாம் தத்துவசித்திக் கற்பனைக் கலைகளென்றும், வேதாந்தம் சித்தாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த மதங்களும் மார்க்கங்களும் சுத்த சன்மார்க்க அனுபவ லேசசித்தி பேதங்களென்றும் கேள்விப்பட்டிருக்கின்றனம். ஆகலில்,

Koviloor Digital Library

அத்திருவார்த்தைகளில் உண்மையான நம்பிக்கை கொண்டு, அவ்வவற்றின் உண்மைகளை உள்ளபடியே உணர்த்தப்பெற்று அவைகளின் அனுபவங்களை அடைதல் வேண்டுவதுபற்றி, அவ்வச்சமய மதாசாரங்களைச் சிறிதும் அனுட்டியாது நிற்றலும், அவற்றின் சத்திய உணர்ச்சி கொள்ளாமல் விடுதலும் வேண்டும்.

அன்றியும் :-

உலகியற்கண் பொன் விஷய இச்சை, பெண் விஷய இச்சை, மண் விஷய இச்சை முதலிய எவ்விஷய இச்சைகளிலும் நமது அறிவை ஓர் அணுத்துணையும் பற்றுவிக்காமல், பொதுப்பட நல்லறிவு, கடவுள் பக்தி, உயிரிரக்கம், பொதுநோக்கம், திரிகரண அடக்கம் முதலிய நற்குண ஒழுக்கங்களில் நின்று, உண்மையுரைத்தல், இன்சொலாடல், உயிர்க்கு பகரித்தல் முதலியவாகக் குறித்த நற்செய்கைகளையும் உள்ளபடி பெற்று, சித்திவளாகம் என்னும் இம்மஹா சந்நிதானத்திற்றானே தரிக்கப்பெறவும்; உலகமுகப்பட்ட பராக்கினால் விலகி ஏமாந்துவிடாமலும்; நமது எல்லாம்வல்ல ஆண்டவர் அற்புதத் திருவரவுகுறிக்கும் வெளிப்படுகைக்கு எதிர்பார்க்கும் நிலையினராய், எல்லா அண்ட சராசரங்களையும் தமது தனித்திருவருட் செங்கோல் கொண்டு நடாத்துவித்தருளும் பேரருட் பெருங்கருணை வாய்ந்த

தனிப்பெருந்தலைவரது அரிய திருவருகைச் சம்பந்தமான வழிபடுகை அல்லது மங்கலம்புனைதல் முதலிய திருப்பணியிடம் நமது கரணேந்திரியங்களை விடுத்துக் குதூகலத்துடன் விந்துவிளக்கம் நாதஒலி என்பவற்றால் புறக்கடையில் விலகப்படாமலும்; ஆண்டவனாரது அருளற்புத ஞான சித்தத்திருமேனியின் மங்கலத் திருக்கோலத்தைக் கண்காட்சியாகஉடல்குழையஉள்ளங்குளிரஆனந்தக்கண்ணீர்கொண்டு பரவசத்துடன் தரிசிக்கப் பெறும், பெரும் புண்ணியமுடையவர்களாய் எதிர்பட வாய்க்கப்பெறவும் நின்றோமேயானால் :

நாம் எல்லவரும் சுத்த சன்மார்க்கத்தினுக்கு உரிமை உடையவர்களாகி, அறிவுவந்தகால முதல் கண்டறியாத அற்புதக் காட்சிகளையும்கேட்டறியாதஅற்புதக்கேள்விகளையும்,அறிந்தறியாத அற்புத அறிவுகளையும் அடைந்தறியாத அற்புதக் குணங்களையும், செய்தறியாத அற்புதச் செயல்களையும், அனுபவித்தறியாத அற்புத அனுபவங்களையும் வெளிப்படத் தரிசிக்கும் அதே கணத்தின் உள்ளே பெற்றுப் பெருங்களிப்புடன் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் தடைபடாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வு என்னும் பேரின்ப சித்திப் பெருவாழ்வில் வாழப் பெறுவோம்.

Koviloor Digital Library

இது சத்தியம், இது சத்தியம், இது சத்தியம்.

இங்ஙனம் நமது ஆண்டவரால் விரித்து விவரிக்கப்பட்ட மலையிலக்கான பொய்யாப் பெருமொழியென்னும் கருணாரசத்தின் வெள்ளப் பெருக்கத்தில் ததும்பி வழிந்த மந்திரத் திருவருண் மெய்ம்மொழிகளின் சுருக்கம்.

21. சன்மார்க்க சங்கம் விளங்கும் காலம் 27-4-1870

சமரச வேத சன்மார்க்க சங்கம் கூடி விளங்கும் காலம் எது? அது நமக்கு அறிவு வந்த நாள்தொட்டு அந்நாள் பரியந்தம் இறந்து போன நமது சிநேகர், உறவினர், அடுத்தோர், வார்த்திபர், வாலிபர், பாலியர், குமாரர், ஆண்மக்கள், பெண்மக்கள் என்பவர் எல்லாம் உயிர்பெற்று எழுந்து மேற்குறித்த சங்கத்தில் கூடி விளங்கும் காலமாகும். இது விஷயத்தில் தருக்கம் செய்யப்படாது. உண்மை.

பிரமோதூத வருடம் சித்திரை 16
உத்தரஞான சித்திபுரம் (மேட்டுக்குப்பம்).

22 சன்மார்க்க பெரும்பதி வருகை 12-4-1871

சுவாமிகளுக்குத் தெரிவிப்பது

சுத்த சிவசன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்தும் வழங்கும் இதற்கு எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை.

தடையற்ற பெருநெறி வழக்கம் இக்காலந்தொட்டு அளவிறந்த நெடுங்கால வரையில் வழங்கும். அதன்மேலும் அதன்மேலும் வழங்கும். பலவகைப்பட்ட சமய பேதங்களும், சாத்திரபேதங்களும், ஜாதிபேதங்களும், ஆசாரபேதங்களும் போய், சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம் விளங்கும்.

அது கடவுள் சம்மதம். இது 29 மாதத்திற்குமேல். இப்போது வருகின்ற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள். மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லாக் கடவுளரும், எல்லாத் தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்ப்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி. இது உண்மையாயின் அந்தப் பதியின் அருளை நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன். என்னையடுத்த தாங்களும் பெறுதற்கு யாதொரு தடையுமில்லை. பெறுவீர்கள், பெறுகின்றீர்கள், பெற்றீர்கள், அஞ்சவேண்டாம்.

Koviloor Digital Library

பிரஜோற்பத்தி சித்திரை 1

23. சன்மார்க்க சங்க பழக்க விதி 25-11-1872

சித்திவளாகத்திலும் தருமச்சாலையிலும் வசிப்பவர்கள் பரஸ்பரம் பழகுவதற்கு எச்சரிப்புப் பத்திரிகை

ஆண்டவர் ஒருவர் உள்ளார் என்றும், அவர் பொதுப்பட உலகத்திலுள்ளார் யாவரும் சன்மார்க்கப் பெரும்பயன் பெற்று நித்திய வாழ்வு வாழ்தற்பொருட்டு வெளிப்படக் காரியப்படுகின்றனர் என்றும், அதுகாலையில் நாமும் ஆன்மலாபத்தைப் பெற்றுக் கொள்ளுவோம் எனவும் நம்பி இங்கே வசிக்கும் யாவரும் வழிபாடு விஷயத்தில் ஒரு தடையும் சொல்லாது ஒத்து இருத்தல் அவசியம். அன்றியும் கால பேதத்தால் அல்லது மற்றவகையால் அவ்வத் தருணங்களில் நேரிடும் குரோதத்தால் விளையும் துவேஷாதிகள் உண்டாயினாலும் அல்லது உண்டாகிறதாயிருந்தாலும் உடனே ஜாக்கிரதைப் பட்டு அதை முற்றிலும் மறந்துவிடல் வேண்டும். அப்படியிருத்தல் மேல்விளைவை உண்டுபண்ணாதிருக்கும்.

அப்படி இனிமேல் ஒருவரை ஒருவர் அதிக்கிரமித்த வார்த்தைகளால் சண்டை விளையத் தக்கதாக வைதாலும் அப்படி வைதவர்களையும்அந்தவைதலைக்கேட்டுச்சகிப்பவர்களோடுமறுபடி அத்துவேஷத்தை ஒருங்கே விட்டுமறந்து மனக்கலப்புடன் மருவுதல் வேண்டுவது. அப்படி மருவாதார்களையும் உடனே ஒதுக்கிவிட வேண்டுவது. அல்லது குரோதத்தால் விளையும் அக்கிரம அதிக்கிரம வார்த்தைகளைக் கேட்டு தாங்கள் எதிர்த்து வார்த்தையாடாமல் கூட்டத்தாரில் அப்போது இருக்க வாய்ந்த இரண்டொருவர்க்குத் தெரிவித்தல் வேண்டும். அப்படி தெரிவிக்காதவர்களும் எதிர்த்துச் சண்டை தொடுப்பவர்களும் இங்கிருத்தல் அனாவசியம். அப்படிப்பட்டவர்களை ஒரு பேச்சுமில்லாமல் இந்த இடம் விட்டுப் போய்விடத் தக்க முயற்சி ஒவ்வொருவரும் செய்தல் வேண்டுவது.

ஆங்கிரச வருடம் கார்த்திகை 12

Koviloor Digital Library

24. பேருபதேசம்

ஸ்ரீமுக வருஷம், ஐப்பசி மாதம், 7-ஆம் தேதி (21-10-1873)
செவ்வாய்க் கிழமை காலை 8-00 மணிக்கு
மேட்டுக்குப்பம் என்னும் சித்திவளாகத் திருமாளிகையில்
முதன் முதலில் கொடி கட்டினவுடனே நடந்த
நிகழ்ச்சியின் குறிப்பு.

இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்தது போல் இனியும் வீண்காலம் கழித்துக் கொண்டிராதீர்கள். இது முதல் சாலைக்கு ஆண்டவர் போகின்ற பத்துத் தினமாகிய கொஞ்சக் காலம் - வரையில், நீங்கள் எல்லவரும் நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள். அந்த விசாரணை எது என்றால்: நம் நம்முடைய நிலை எப்படிப்பட்டது? நமக்கு மேல் நம்மை அதிஷ்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை எப்படிப் பட்டது? என்று விசாரிக்க வேண்டியது. அதற்குத் தக்கபடி, நீங்கள் ஒருமித்தாவது, அல்லது தனித் தனியாகவாவது, உங்களிறிவிற்கும் ஒழுக்கத்துக்கும் ஒத்தவர்களுடன் கூடியாவது, அல்லது வேலாயுத முதலியாரைக் கேட்டால் மனுஷ்யதரத்தில் போதுமான வரையில் சொல்லுவார் அவரிடம் அப்படிக் கேட்டாவது நல்ல விசாரணையில் இருங்கள்.

அல்லது தனியாகவும் விசாரிக்கலாம். இவ்விசாரணை முகத்திலிருந்தால், நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக்கொண்டிருக்கின்ற அனந்தத் திரைகளில் அழுத்தமாய் இருக்கின்ற முதல் திரையாகிய பச்சைத்திரை முதலில் நீங்கிவிடும். அது நீங்கினால், மற்றத் திரைகள் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும். அந்தப் பசுமை வர்ணம் எப்படிப்பட்ட தென்றால், கருமைக்கு முதல் வர்ணமான பசுமையாக இருக்கின்றது. இப்படிப்பட்ட அழுத்தமான திரை நீங்க வேண்டுமென ஸ்தோத்திரித்தும், தெய்வத்தை நினைத்தும், நமது குறையை ஊன்றியும் இவ்வண்ணமாக, இருக்கின்றபோதும் படுக்கின்ற போதும் இடைவிடாது இவ்விசாரத்தோடு ஆண்டவர் நமக்குண்மையை தெரிவிக்க வேண்டும் என்கின்ற முயற்சியுடன் இருந்தால், தெரிய வேண்டியதைத் தெரிந்துகொள்ளலாம்.

அவ்விசாரம் பரம், அபரம் என்று இரண்டு வகையாய் இருக்கின்றது. இவற்றில் பரம் பரலோக விசாரம், அபரம் இகலோக விசாரம். இவ் இரண்டில் இகலோக விசாரம் விசாரம் அல்ல. சாதாரணமாக ஒருவன் விசாரம் செய்து கொண்டிருக்கின்றானே என்றால், அவ்விசாரம் விசாரம் ஆகாது, உண்மை விசாரமும் அல்ல.

Koviloor Digital Library

ஏனெனில்; விசாரம் என்கின்றதற்கு பொருள்: விசாரம் என்பதில் "வி" விசாதாரண உலக விசாரத்தை மறுக்க வந்தது; அது மேலும் பரலோக விசாரத்தையே குறிக்கும் பொருட்டு வந்தது. ஜலத்தில் இருக்கின்ற பாசியை நீக்குவது போல், நமது ஆன்மாவைத் தெரியவொட்டாமல் மூடி இருக்கின்ற பச்சைத் திரையாகிய ராகாதிகளை விசார அதியுஷ்ணத்தால் அல்லது, மற்ற உஷ்ணங்களால் நீக்க முடியாது. அந்த உஷ்ணம் யோகியினுடைய அனுபவத்தில் தெரியும். அதை மனுஷ்ய தரத்தில் உண்டு பண்ணுவதற்குத் தெரியாது. அந்தவிசாரத்தை விட ஆண்டவரை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் தெய்வத்தை நினைக்கின்றதிலும் அதிக உஷ்ணம் உண்டாகும். யோகிகள் வனம், மலை, முழை (குகை) முதலியவற்றிற்குப் போய், நூறு ஆயிரம் முதலிய வருஷகாலம் தவம் செய்து, இவ் உஷ்ணத்தை உண்டுபண்ணிக் கொள்ளுகின்றார்கள். இப்படித் தவம் செய்து உஷ்ணத்தை உண்டு பண்ணி கொள்ளு கின்றதைப் பார்க்கிலும், தெய்வத்தை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் நினைக்கின்றதிலும் - இதைவிடக் கோடிப் பங்கு, பத்துகோடிப் பங்கு அதிகமாக உஷ்ணம் உண்டு பண்ணிக் கொள்ளலாம். எவ்வாறெனில்:

ஒரு ஜாம நேரம், மனத்தில் இக விசாரம் இன்றிப் பர விசாரிப்புடன் ஆன்ம நெகிழ்ச்சியோடு தெய்வத்தைச் சிந்தித்துக் கொண்டாவது அல்லது ஸ்தோத்திரம் செய்து கொண்டாவது இருந்தால், நாம் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம். ஆதலால், இவ்வுலகத்தில் வி-சாரம் என்கின்ற உண்மை தெரியாது, விசாரமென்று வழங்கி, அதைத் துக்கம் என்றே சொல்லுவார்கள். நாம் அப்படி அர்த்தம் பண்ணக் கூடாது. அவர்கள் பண்ணுகின்றது துக்கமே விசாரமென்கின்றது

அது தப்பு; அவ்வர்த்தமும் அன்று. சாரம் என்கின்றது துக்கம். விசாரம் என்கின்றது துக்க நிவர்த்தி. வி உபசர்க்கம். சாரம் என்கின்ற துக்கத்தை நிவர்த்தித்தது ஆதலால், விசாரம் என்கின்றது முன் சொன்னபடி பரலோக விசாரத்தையே குறிக்கின்றது. ஆதலால் இடைவிடாது நாம் விசார வசத்தராயிருக்க வேண்டியது. மேலும் வி சாரம் என்பது: வி விபத்து; சாரம் நீக்குதல், நடத்தல் ஆதலால் இடைவிடாது நன்முயற்சியின் கண் பயிலுதல் வேண்டும்.

மேலும், சிலர் இது ஆண்டவர் வருகின்ற தருணமாக இருக்கின்றதே! இத்தருணத்தில் முயற்சி செய்வானேன்? ஆண்டவர் வந்தவுடனே பெற வேண்டியதை நாம் பெற்றுக் கொள்ளப் படாதோ? இஃது தாம் வினவியது நலந்தான். ஆண்டவர் வரப்போகின்றது

Koviloor Digital Library

சத்தியந்தான். நம்மவர்களின் திரை நீங்கப் போகின்றதும் சத்தியந்தான். நீங்கள் எல்லவரும் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளுகின்றதும் சத்தியந்தான். ஆனால், முன் சொன்ன ராக சம்பந்தமான பச்சைத்திரை இரண்டு கூறாக இருக்கின்றது.

யாவெனில்: அசுத்தமாயாதிரை சுத்தமாயாதிரை என்னும் இரண்டுமாம். இவை கீழ்ப்பாகத்தில் ஒரு கூறும் மேல் பாகத்தில் ஒரு கூறுமாக இருக்கும். கீழ்ப்பாகத்திலுள்ளது அசுத்தமாயாதிரை. மேல் பாகத்தில் சுத்த மாயாதிரை இருக்கும். இவற்றில் அசுத்தமாயாதிரை இகலோக போக லக்ஷிய முடையது. சுத்த மாயாதிரை பரலோக சாத்தியத்தை உடையது. இவற்றில் ஆண்டவர் வந்து அனுக்கிரகம் செய்கின்ற போது, முயற்சி இல்லாத சாதாரண மனுஷ்யர்களுடைய கீழ்ப்பாகத்தில் இருக்கின்ற அசுத்தமாயை என்னும் பச்சைத்திரையை மாத்திரம் நீக்குவார். ஆதலால், அக்காலத்தில் நாம் அத்திரை நீங்கியவுடன் கூடியவரையில் சுத்தமாய்ப் புனிதர்களாக இருக்கலாமேயல்லது, பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளுகின்றதற்குக் கூடாது. மேலும், பஞ்சகிருத்திய விபவங்களும் இதர சித்தி முதலியவையும் ஆன்மானுபவத்தையும் செய்யவும் பெறவும் கூடாது. பின்னும் நன்முயற்சி செய்தே மேலேற வேண்டும்.

மேலும், இத்தருணம் இங்கு உண்டாகும் கூச்சல் முதலியவையும் அடுத்தவர்களுக்குப் பக்குவம் வருவிக்கவும் பாவிகளை விலக்கவும் உண்டாயின. ஆதலால் நாம் எல்லவரும் இத்தருணம் இப்போதே விசேஷ நன் முயற்சியுடனே இருந்தால், ஆண்டவர் வருகின்றபோது, நம் கீழ்ப் பாகத்திலுள்ள அசுத்தமாயா திரையோடு கூடி மேற்பாகத்தில் இருக்கின்ற சுத்த மாயையினுடைய பச்சைத் திரையும் நீங்கிப் போய்விடும். கருமையிற் பச்சை வண்ண முடையது அசுத்த மாயா திரை. பொன்மையிற் பச்சை வண்ணமுடையது சுத்தமாயாதிரை. கருமையிற் பச்சை வண்ணமுடைய அசுத்தமாயாதிரை நீங்கின பிறகு, மற்ற எட்டுத் திரைகளும் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும். இத்திரைகளின் விவரத்தைத் அருட்பெருஞ்ஜோதி அகவலில் கண்டுணர்க. மேலும், இது நீங்கினவுடனே ஒருவன் பஞ்சகிருத்திய முதலானவையுஞ் செய்வான். ஆதலால், ஒவ்வொருவரும் முயற்சியுடனே இருந்தால், அதற்கு தக்க லாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கு மேற்பட, நாம் நாமும் முன் பார்த்தும் கேட்டும் லக்ஷியம்வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லக்ஷியம் வைக்க வேண்டாம்.

Koviloor Digital Library

ஏனென்றால், அவைகளில் ஒன்றிலாவது குழூஉக் குறியன்றித் தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும், கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல், மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். அணுமாத்திரமேனுந் தெரிவிக்காமல், பிண்ட லக்ஷணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில்: கைலாசபதி என்றும் வைகுண்டபதி என்றும் சத்தியலோகாதிபதி என்றும் பெயரிட்டு, இடம், வாகனம், ஆயுதம், வடிவம், ரூபம் முதலியவையும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பது போல் அமைத்து, உண்மையாக இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். தெய்வத்துக்குக் கைகால் முதலியன இருக்குமா? என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கின்றார்கள். இஃது உண்மையாக இருப்பதாகவே முன்னும் பின்னும் உள்ள பெரியவர்களென்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையை அறியாது, அப்படியே கண்ணை மூடிக் கொண்டு உளறி இருக்கிறார்கள். ஆனால், ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை.

இதுவரைக்கும் அப்படிப்பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை. அவைகளில் ஏகதேச கர்ம சித்திகளைக் கற்பனைகளாகச் சொல்லி இருக்கின்றார்கள். அதற்காக ஒவ்வொரு சித்திக்கும் பத்து வருஷம் எட்டு வருஷம் பிரயாசை எடுத்துக் கொண்டால், அற்ப சித்திகளையடையலாம். அதற்காக அவற்றில் லக்ஷியம் வைத்தால், ஆண்டவரிடத்தில் வைத்துக் கொண்டிருக்கின்ற லக்ஷியம் போய்விடும். ஆண்டவரிடத்தில் வைத்த லக்ஷியம் போய்விட்டால், நீங்கள் அடையப் போகின்ற பெரிய பிரயோஜனம் போய்விடும். அல்லது, அதில் முயற்சிசெய்து, அவ்வளவு காலம் உழைத்து, அந்த அற்பப் பிரயோஜனத்தைத் தெரிந்து கொண்டு, அதனால் ஒரு லாபத்தை ஏகதேசம் அடைந்தால், முக்கிய லாபம் போய்விடும். ஆகையால், அவைகளில் லக்ஷியம் வைக்காமல், ஆண்டவர் இடத்திலேயே லக்ஷியம் வைக்க வேண்டியது. முன் சொன்ன ஏகதேச சித்தி கற்பனை என்கின்றது வாசகப் பெரு விண்ணப்பத்தாலும் இயல் வேதாகமங்கள் புராணங்கள் என்ற அருள் விளக்க மாலைப் பாசுரத்தாலும் உணர்க. மேலும் அதிற்கண்ட குறிப்பையும் தெரிந்து கொள்ளுங்கள்.

இதுபோல் வியாகரணம் தொல்காப்பியம், பாணினியம் முதலியவைகளில் சொல்லி இருக்கின்ற இலக்கணங்களில்

Koviloor Digital Library

குற்றம் உள்ளது. எவ்வாறெனில்: தொண்ணூறு தொள்ளாயிரம் என்கின்ற கணிதத்தின் உண்மையை நான் சொன்ன பிறகு தெரிந்து கொண்டீர்கள் அல்லவா? இப்படியே ஒன்று இரண்டு முதல் நூறு முதலான இலக்கங்களுக்கும் உகர இறுதி வருவானேன்? ஒருவாறு சித்தர்கள் காரணப் பெயராக இட்டிருக்கின்றார்கள். தொள்நூறு தொண்ணூறென்றும், தொள்ஆயிரம் தொள்ளாயிர மென்றும் வழங்குகின்றன. தொள் என்பது ஒன்று குறையத் தொக்கது. தொன்மை தொள் எனப் பிரிந்தது. வழக்கத்தில் தொள்ளாயிரம் தொண்ணூறு என மருவியது. இதற்குப் பத்திடத்திற்கு ஓரிடம் குறைந்த முன் ஆயிரம் என்றும், ஒன்று குறைந்த பத்தென்றும் ஒருவாறு கொள்க. இப்படி நான் சொன்னதுபோல் சொன்னால், சிறு குழந்தைகள் கூட அறிந்து கொள்ளும்.

இதுபோல், சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும் வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லக்ஷியம் வைக்க வேண்டாம். அவற்றில் தெய்வத்தைப் பற்றிக் குழூஉக் குறியாகக் குறித்திருக்கின்றதே அன்றிப் புறங்கவியச் சொல்ல வில்லை. அவ்வாறு பயிலுவோமேயானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லக்ஷியம் வைக்க வேண்டாம். ஏனெனில், அவைகளிலும்

அவ்வச்சமய மதங்களிலும் அற்பப் பிரயோஜனம் பெற்றுக் கொள்ளக்கூடுமேயல்லது, ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கையுண்மை என்னும் ஆன்மானு பவத்தைப் பெற்றுக் கொள்கின்றதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும், இவைகளுக்கெல்லாம் சாக்ஷி நானே இருக்கின்றேன். நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது. அது பட்டணத்துச் சுவாமிகளுக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலருக்கும் தெரியும். அந்த லக்ஷியம் இப்போது எப்படிப் போய் விட்டது பார்த்தீர்களா! அப்படி லக்ஷியம் வைத்ததற்குச் சாக்ஷி வேறே வேண்டியதில்லை. நான் சொல்லி இருக்கின்ற -- திருவருட்பாவில் அடங்கி இருக்கின்ற ஸ்தோத் திரங்களே போதும். அந்த ஸ்தோத்திரங் களையும் மற்றவர்களுடைய ஸ்தோத்திரங்களையும் சபைக்குக் கொண்டு வந்தால், அவைகளே சாக்ஷி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போது இருந்தது என்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அறிவாக இருந்தது. இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலைமேல் ஏற்றியிருக்கின்றார். எல்லாவற்றையும் விட்டு விட்டதினால் வந்த லாபம் இது.

Koviloor Digital Library

ஆதலால் நீங்களும் விட்டு விட்டீர்களானால், என்னைப் போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துக் கொண்டிருந்தவர்கள் ஏதாவது லாபத்தைப் பெற்றுக் கொண்டார்களா? பெற்றுக் கொள்ள வில்லை. நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்து இருந்த லக்ஷியமே என்னை இந்த நிலையில் தூக்கிவிட்ட தென்றாலோ, அந்த லக்ஷியம் தூக்கிவிட வில்லை. என்னை இந்த இடத்துக்குத் தூக்கிவிட்டது. யாதெனில்; அக்காலத்திலேயே எனக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்தார் என்று வாசகப் பெரு விண்ணப்பத்தினும், "எத்தேவரையும் நின் சாயையாய்ப் பார்த்ததேயன்றித் தலைவ வேறெண்ணியது உண்டோ" என, தேடியதுண்டு நினதுருவுண்மை என்னும் தொடக்கம் உடைய பதிகத்திலும் விண்ணப்பித்து இருக்கின்றேன். மேலும் அவர் தெரிவித்த உண்மைப் பெருநெறி ஒழுக்கம் யாதெனில், "கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக" என்றது தான். என்னை யேறா நிலைமிசையேற்றி விட்டது யாதெனில் தயவு. தயவு என்னும் கருணைதான் என்னைத் தூக்கி விட்டது.

அந்தத் தயவுக்கு ஒருமை வரவேண்டும். அந்த ஒருமை இருந்தால் தான் தயவு வரும். தயவு வந்தால்தான் பெரிய நிலைமேல் ஏறலாம். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினாலேதான் வந்தது. நீங்களும் என்னைப் போல் ஒருமையுடனிருங்கள். என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத்தனமாய் எப்படி இருந்தாலும் அவனுக்கு,

நல்லவார்த்தை சொல்லுவேன்;
மிரட்டிச் சொல்லுவேன்;
தெண்டன் விழுந்து சொல்லுவேன்;
பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன்; அல்லது
ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன்.

இப்படி எந்த விதத்திலேயாவது நல்வழிக்கு வரச் செய்து விடுவேன்.

நீங்கள் எல்லவரும் இப்படியே செய்தல் வேண்டும் "இராத்திரி கூட நான்இல்லாமல்இந்தஜனங்கள்க்ஷணநேரம்இருக்கமாட்டார்களே என்று, என்று"... ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன். அது இங்கே இருக்கின்ற ஜனங்கள் மட்டில் மாத்திரம் அல்ல. உலகத்திலிருக்கின்ற எல்லா ஜனங்களையும் குறித்தே விண்ணப்பித்துக்

Koviloor Digital Library

கொண்டேன். ஏன் அப்படி ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன் என்றால்: எல்லவரும் சகோதரர்களாதலாலும், இயற்கை உண்மை ஏகதேசங்கள் ஆதலாலும் நான் அங்ஙனம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமை வைத்துக் கொண்டிருக்கின்றேன்.

இப்போது நீங்கள் இதுவரைக்கும் ஒழுக்கத்துக்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷ்யர்களாய் இருந்தாலும் தருமசாலைக்குப் போகக் கொஞ்ச தினம் இருக்கின்றது. அதற்கு உள்ளாக நீங்கள் நீங்களும் நல்லொழுக்கத்திற்கு வருவதோடு கூட, மற்றவர்களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்விதத் தந்திரமாவது செய்து நம்மவர்களாக்கிக் கொள்ள வேண்டியது.

நீங்கள் கொஞ்ச தினத்துக்கு அப்படிச் செய்து கொண்டிருங்கள். நானும் ஆண்டவரிடத்தில் இவ்வுலகத்திலுள்ள எல்லா ஜீவர்களும் நன்மை அடையப் பிரார்த்தித்தும், ஆண்டவரிடத்தில் கேட்டுக்கொண்டும் வருகின்றேன். ஆதலால், நீங்கள் அப்படிச் செய்து கொண்டிருங்கள்.

சமயந் தவிர மதங்களில் உள்ள வேதாந்தி சித்தாந்தி என்று பெயரிட்டுக் கொண்ட பெரியவர்களும் உண்மையறியாது, சமயவாதிகளைப் போலவே ஒன்று கிடக்க ஒன்றை உளறுகின்றார்கள். ஆதலால் நீங்கள் அஃது ஒன்றையும் நம்பவேண்டாம் எவைகளிலும் தெய்வத்தைப் புறமுகமாகப் புலப்படச் சொல்லவில்லை. "**தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வமெனச் சுற்றுகின்றார்கள். ஐயோ ! நம் சகோதரர்கள் தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாததினாலே அல்லவா நம்மைச் சுற்றுகின்றார்கள்!**" என்று நான் உள்ளும் புறமும் பரிதாபப்பட்டுக் கொண்டே இருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன். தெய்வத்தை ஏன் தெரிந்து கொள்ளவில்லை என்றால்: ஒரு பதார்த்தத்தை அனுபவித்தால் அல்லது அந்தப் பதார்த்தத்தினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின் மேல் இச்சை போகாது. அதுபோல், தெய்வத்தை உள்ளபடி அனுபவித்தால் அல்லது, தெய்வத்தினிடத்தில் பிரியம் வராது. ஆதலால், தெய்வத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற முக்கிய லக்ஷியத்திலிருந்து கொண்டு விசாரம் செய்து கொண்டிருங்கள்.

அந்த விசாரம் செய்வது எப்படியென்றால்: அண்டத்தில் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் இவைகள் எப்படிப் பட்டன? இவைகளினுடய சொரூப ரூப சுபாவம் என்ன? இவை முதலான

Koviloor Digital Library

அண்ட விசாரமும், பிண்டத்தில் நாம் யார்? இத் தேகத்தின் கண்புருவம் கைம்மூலம் - - இவைகளினும் இவை போன்ற மற்ற இடங்களிலும் உரோமம் உண்டாவானேன்? நெற்றி முதலான இடங்களில் அது தோன்றாதிருப்பதென்ன? கால் கைகளிலுள்ள விரல்களில் நகம் முளைத்தலும் அந்நகம் வளர்தலும் இவைபோன்ற மற்றத் தத்துவங்களினது சொரூப ரூப சுபாவங்களும் என்னவென்னும் பிண்ட விசாரமும் செய்து கொண்டிருங்கள். இப்படி இடைவிடாது விசாரம் செய்து கொண்டிருந்தால், இவ்வுலகத்தின் கணுள்ள ஜனங்கள் அதைக் குறித்து ஏளனமாகச் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுவது அவர்களுக்குச் சுபாவம். ஏனெனில், அவர்களுக்கு உண்மை தெரியாது. ஆதலால் நீங்கள் அதை லக்ஷியம் செய்யக்கூடாது.

இப்படியே "காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வரவிடுத்தவர் - ஆணுக்குக் கடுக்கனிடுதலும் பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடுதலும் தமக்குச் சம்மதமானால் காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல்களிட்டு வரவிட்டிருக்க மாட்டாரா" என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுகின்ற பக்ஷத்தில், காதில் கடுக்கனிடவும் மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா ? இப்படி விசாரித்துப் பிரபஞ்ச போகத்தின்கண் அலக்ஷியம் தோன்றினால், நிராசை உண்டாகும், ஆதலால், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நான்கில், மூன்றாவது படியாகிய ஞானத்தில் யோகம் செய்கின்ற பலனாகிய நிராசையென்னும் படி உண்டாகின்றது. ஆகையினாலே, இந்த விசாரத்திலிருந்து கொண்டிருங்கள்.

இவ் விசாரம் செய்துகொண்டிருந்தால், ஆண்டவர் வந்தவுடனே கண்டமாக உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவிப்பார். மறுபடியும் உங்களுக்கு உரிமை வந்தவுடனே அகண்டமாகத் தெரிவிப்பார். ஆதலால் நீங்கள் இந்த முயற்சியில் இருங்கள். இரண்டரை வருஷமாக நான் சொல்லிக் கொண்டு வந்தேன். இனிச்சொல்பவர்கள் சில நாள் தடைப்பட்டிருப்பார்கள். இனி நீங்கள் இதுவரைக்கும் இருந்ததுபோல் இராதீர்கள்.

இது முதல் - - கொஞ்ச காலம் தருமச்சாலைக்குப் போகின்ற வரைக்கும், ஜாக்கிரதையாக மேற்சொன்ன பிரகாரம் விசாரம் செய்து கொண்டிருங்கள்.

மேலும், சமய மதங்களில் தெய்வத்தினது உண்மையைக் குழூஉக் குறியால் குறித்து, அக்குறிப்பையும் வெளிப்படையாகக் காட்டாது சிவாயநம என்றும், நமசிவாய என்றும், இது போன்ற அனந்த வர்ணங்களைச் சேர்த்து, ஒன்று இரண்டு மூன்று ஐந்து ஆறு

Koviloor Digital Library

எட்டு பத்து பதின்மூன்று பதினைந்து பதினாறு இருபத்துநான்கு முதலிய சங்கையில் மந்திரங்களாய் அமைத்து வழங்கி வருவிக்கவிட்டு நடந்து வருகின்றது. அவ்வவ் மந்திரங்களின் அர்த்தம் பலவாக விரியும் ஆதலால்.... நாம் அடைய வேண்டுவது முடிவான ஆன்மலாபமாகிய சிவானுபவமேயன்றி வேறில்லை. இங்குள்ள எல்லவர்க்கும் சுவர்க்க நரக விசாரமில்லை. சுவர்க்க நரக விசாரமுள்ளவர்கள் தங்கள் கருத்தின்படி பலவகைச் சாதனங்களைச் செய்து அற்ப பிரயோஜனத்தைப் பெற்று, முடிவில் தடைப்பட்டுத் திருவருள் துணையால் கருணை நன் முயற்சி எடுத்துக் கொண்டு, பின் முடிவான சித்தி இன்பத்தைப் பெறுவார்கள். அஃது அருமை (கடினம்).

இத்தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு, முடிவான இன்பானுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகாவாக்கியத் திருமந்திரத்தை-- தமது உண்மையை வெளிப்படக்காட்டும் மகாமந்திர வாக்கியத்தை —— எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது. மெய்யறிவின்கண் அனுபவித் தெழுந்த—— உண்மையறிவனுபவானந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம் திரிபு மயக்கம் இன்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன்; குறிப்பிக்கின்றேன்; குறிப்பிப்பேன்; நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில்: நமக்கு முன் சாதனம் கருணை யானதினாலே, ஆண்டவர் முதற்சாதனமாக

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவேயாம். இஃது வாச்சியார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால், முடிவான இன்பானுபவம் பெறுவதற்குத் தடையில்லை. **சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்** என்னும் பிரமாணத்தால் உணர்க.

மேலும், இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது, அசுத்த மாயாகாரிகளாகிய சித்தர்கள் மறைத்து விட்டார்கள். சுத்தமாயா காரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால், அனுபவித்தறியாத அனுபவமும் கேட்டறியாத கேள்வியும் நாம் கேட்டிருப்போம்.

Koviloor Digital Library

மேலும் இறந்தவர்கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால், கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத்தருணமே. ஆதலால் இத்தருணம் இக்காலமே சன்மார்க்கக் காலம்.

இதற்குச் சாட்சியாக இப்போதுதான் சன்மார்க்கக் கொடி கட்டிக் கொண்டது. அக்கொடி இப்போதுதான் கட்டிக் கொண்டது. அக்கொடி உண்மையில் யாதெனில்: நமது நாபி முதல் புருவமத்தி ஈறாக ஒரு நாடி இருக்கின்றது; அந்த நாடி நுனியில் புருவமத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது; அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம்; மேற்புறம் மஞ்சள் வர்ணம்; அச் சவ்வின் கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது; இக்கொடி நம் அனுபவத்தின்கண் விளங்கும். இவ் அடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளி முகத்தில் அடையாள வர்ணமான கொடி கட்டியது. இனி எல்லவர்க்கும் நல்ல அனுபவம் அறிவின்கண் தோன்றும்.

உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்துகொள்வாரில்லை. கொடி கட்டிக் கொண்டபடியால், இனி எல்லோரும் உண்மையை அறிந்து கொள்வார்கள். முன் உள்ளவர்கள் உண்மையைத் தெரிய வொட்டாது மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். இத்தருணம் ஆண்டவரும் தெரிவித்தார், தெரிவிக்கின்றார், தெரிவிப்பார். நீங்கள் எல்லவரும் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். இப்போது நான் சொல்லிவந்த பிரகாரம் ஜாக்கிரதையுடன் உண்மையறிவாய் விசாரம் செய்து கொண்டிருங்கள். அவசியம் இதற்குக் காரணமான தயவிருக்க வேண்டியது. அந்தத் தயவு வருவதற்கு ஏதுவான ஒருமையும் கூட இருக்க வேண்டும். இப்படி இருந்து கொண்டிருந்தால் ஆண்டவர் வந்தவுடனே எல்லா நன்மையையும் பெற்றுக் கொள்வீர்கள்.

இது சத்தியம், சத்தியம், சத்தியம்.

இஃது ஆண்டவர் கட்டளை.

எல்லோர்க்கும் தாய் தந்தை அண்ணன் தம்பி முதலான ஆப்தர்களால் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ, அதற்குக் கோடி கோடிப் பங்கு அதிகமாக உதவி கொடுக்கும் படியான இடம் இந்த இடம் (சித்தி வளாகம் என்கின்ற மேட்டுக்குப்பம்).

இஃது ஆண்டவர் கட்டளை

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பேருபதேசம் முற்றிற்று.

Koviloor Digital Library

பாகம் -2

திருஅருட்பா ஆறாம் திருமுறையில் சன்மார்க்க விளக்கம்

தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்
சார்திருக் கோயில் கண் டிடவும்
துங்கமே பெறுஞ்சற் சங்கம்நீ டூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும் இச்சைகாண் எந்தாய். ஆறாம் திருமுறை 3478

தலைநெறி ஞான சுத்தசன் மார்க்கம்
சார்ந்திட முயலுறா தந்தோ
கலைநெறி உலகக் கதியிலே கருத்தைக்
கனிவுற வைத்தனர் ஆகிப்
புலைநெறி விரும்பி னார்உல குயிர்கள்
பொதுஎனக் கண்டிரங் காது
கொலைநெறி நின்றார் தமக்குளம் பயந்தேன்
எந்தைநான் கூறுவ தென்னே. ஆறாம் திருமுறை 3549

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண்டுவனே.- 3615

Koviloor Digital Library

அத்தாநான் வேண்டுதல் கேட் டருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்ஜோ தியைப்பெற்றே அகங்களித்தல்
வேண்டும் செத்தாரை மீட்டும் இங்கே எழுப்பியிடல் வேண்டும்
திருச்சபைக்கே அடிமைகளாச் செய்வித்தல் வேண்டும்
ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமைஉளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும்
எத்தாலும் அழியாத வடிவதிலே நானும்
எந்தாயும் ஒன்றாக இனிதுறல் வேண் டுவனே. 3618

அடிகேள்நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அண்டமெலாம் பிண்டமெலாம் கண்டுகொளல் வேண்டும்
துடிசேர்எவ் வுலகமும்எத் தேவரும்எவ் வுயிரும்
சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றிடுதல் வேண்டும்
படிவானும் படைத்தல்முதல் ஐந்தொழிலும் ஞானம்
படைத்தல்முதல் ஐந்தொழிலும் நான்புரிதல் வேண்டும்
ஒடியாத திருவடிவில் எந்தாயும் நானும்
ஒன்றாகி எஞ்ஞான்றும் ஓங்குதல்வேண் டுவனே. 3619

இருளான மலம் அறுத் திகபரங் கண்டே
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ
மருளான பற்பல மார்க்கங்கள் எல்லாம்
வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போகத்
தெருளான சுத்தசன் மார்க்கம தொன்றே
சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்
அருளானவீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே. 3764

Koviloor Digital Library

இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டுத்
தெருட்சாறும் சுத்தசன் மார்க்கநன் னீதி
சிறந்து விளங்கவோர் சிற்சபை காட்டும்
அருட்ஜோதி வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே. 3765

நாட்டியதோர் சுத்தபரா சத்திஅண்டம் முதலா
ஞானசத்தி அண்டமது கடையாக இவற்றுள்
ஈட்டியபற் பலசத்தி சத்தர்அண்டப் பகுதி
எத்தனையோ கோடிகளும் தன்நிழற்கீழ் விளங்கச்
சூட்டியபொன் முடிஇலங்கச் சமரசமெய்ஞ் ஞானச்
சுத்தசிவ சன்மார்க்கப் பெருநிலையில் அமர்ந்தே
நீட்டியபே ரருட்ஜோதித் தனிச்செங்கோல் நடத்தும்
நீதிநடத் தரசேஎன் நெடுஞ்சொல்அணிந் தருளே. 3816

நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதம் எலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ
விழித்திதுபார் என்றெனக்கு விளம்பியசற் குருவே
கால்வருணங் கலையாதே வீணில்அலை யாதே
காண்பனஎல் லாம்எனக்குக் காட்டியமெய்ப் பொருளே
மால்வருணங் கடந்தவரை மேல்வருணத் தேற்ற
வயங்குநடத் தரசேஎன் மாலைஅணிந் தருளே. 3890

Koviloor Digital Library

இயல்வேதா கமங்கள்புரா ணங்கள்இதி காசம்
இவைமுதலா இந்திரசா லங்கடையா உரைப்பார்
மயல்ஒருநூல் மாத்திரந்தான் சாலம்என அறிந்தார்
மகனேநீ நூல்அனைத்தும் சாலம்என அறிக
செயல்அனைத்தும் அருள்ஒளியால் காண்கஎன எனக்கே
திருவுளம்பற் றியஞான தேசிகமா மணியே
அயல் அறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. 3892

தோன்றியவே தாகமத்தைச் சாலம்என உரைத்தேம்
சொற்பொருளும் இலக்கியமும் பொய்எனக்கண் டறியேல்
ஊன்றியவே தாகமத்தின் உண்மைநினக் காகும்
உலகறிவே தாகமத்தைப் பொய்எனக்கண் டுணர்வாய்
ஆன்றதிரு அருட்செங்கோல் நினக்களித்தோம் நீயே
ஆள்கஅருள் ஒளியால்என் றளித்ததனிச் சிவமே
ஏன்றதிரு வமுதெனக்கும் ஈந்தபெரும் பொருளே
இலங்குநடத் தரசேஎன் இசையும் அணிந் தருளே. 3893

நான்முகர்நல் உருத்திரர்கள் நாரணர்இந் திரர்கள்
நவில்அருகர் புத்தர்முதல் மதத்தலைவர் எல்லாம்
வான்முகத்தில் தோன்றி அருள் ஒளிசிறிதே அடைந்து
வானகத்தும் வையகத்தும் மனம்போன படியே
தேன்முகந்துண் டவர்எனவே விளையாடா நின்ற
சிறுபிள்ளைக் கூட்டம்என அருட்பெருஞ்ஜோதியினால்
தான்மிகக்கண் டறிகஎனச் சாற்றியசற் குருவே
சபையில்நடத் தரசேஎன் சாற்றும் அணிந் தருளே.3894

Koviloor Digital Library

தவறாத வேதாந்த சித்தாந்த முதலாச்
சாற்றுகின்ற அந்தமெலாம் தனித்துரைக்கும் பொருளை
இவறாத சுத்தசிவ சன்மார்க்க நிலையில்
இருந்தருளாம் பெருஞ்ஜோதி கொண்டறிதல் கூடும்
எவராலும் பிறிதொன்றால் கண்டறிதல் கூடா
தென்ஆணை என்மகனே அருட்பெருஞ்ஜோ தியைத்தான்
தவறாது பெற்றனைநீ வாழ்கஎன்ற பதியே சபையில்நடத்
தரசேஎன் சாற்றும் அணிந் தருளே. 3895

காலையிலே என்றனக்கே கிடைத்தபெரும் பொருளே
களிப்பேஎன் கருத்தகத்தே கனிந்தநறுங் கனியே
மேலையிலே இம்மையிலே ஒருமையிலே தவத்தால்
மேவுகின்ற பெரும்பயனாம் விளைவைஎலாம் தருமச்
சாலையிலே ஒருபகலில் தந்ததனிப் பதியே
சமரசசன் மார்க்கசங்கத் தலைஅமர்ந்த நிதியே
மாலையிலே சிறந்தமொழி மாலைஅணிந் தாடும்
மாநடத்தென் அரசேஎன் மாலையும்ஏற் றருளே. 3897

ஆதியை ஆதி அந்தமீ தெனஉள்
அறிவித்த அறிவைஎன் அன்பைச்
ஜோதியை எனது துணையைஎன் சுகத்தைச்
சுத்தசன் மார்க்கத்தின் துணிபை
நீதியை எல்லா நிலைகளும் கடந்த
நிலையிலே நிறைந்தமா நிதியை
ஓதியை ஓதா துணர்த்திய வெளியை
ஒளிதனைக் கண்டுகொண் டேனே. 3963

Koviloor Digital Library

உத்தர ஞான சித்திமா புரத்தின்
ஓங்கிய ஒருபெரும் பதியை
உத்தர ஞான சிதம்பர ஒளியை
உண்மையை ஒருதனி உணர்வை
உத்தர ஞான நடம்புரி கின்ற
ஒருவனை உலகெலாம் வழுத்தும்
உத்தர ஞான சுத்தசன் மார்க்கம்
ஓதியைக் கண்டுகொண் டேனே. 3983

சாதியைநீள் சமயத்தை மதத்தைஎலாம்
விடுவித்தென் தன்னை ஞான
நீதியிலே சுத்தசிவ சன்மார்க்க
நிலைதனிலே நிறுத்தி னானைப்
பாதியைஒன் றானவனைப் பரம்பரனைப்
பராபரனைப் பதிஅ னாதி
ஆதியைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்ஜோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ. 4006

அன்புடைய என்னறிவே அருளுடைய பொருளே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
துன்புடைய உலகரெலாம் சுகமுடையார் ஆகத்
துன்மார்க்கம் தவிர்த்தருளிச் சன்மார்க்கம் வழங்க
இன்புடைய பேரருளிங் கெனைப்பொருள்செய் தளித்த
என்அமுதே என்உறவே எனக்கினிய துணையே
என்புடைநீ இருக்கின்றாய் உன்புடைநான் மகிழ்ந்தே
இருக்கின்றேன் இவ்வொருமை யார்பெறுவார் ஈண்டே 4060

Koviloor Digital Library

ஆடகப்பொற் சபைநடுவே நாடகஞ்செய் தருளும்
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
ஏடகத்தே எழுதாத மறைகளெலாம் களித்தே
என்உளத்தே எழுதுவித்த என்உரிமைப் பதியே
பாடகக்கால் மடந்தையரும் மைந்தரும்சன் மார்க்கப்
பயன்பெறநல் அருளளித்த பரம்பரனே மாயைக்
காடகத்தை வளஞ்செறிந்த நாடகமாப் புரிந்த
கருணையனே சிற்சபையில் கனிந்தநறுங் கனியே 4063

தத்துவ பதியே தத்துவம் கடந்த
தனித்ததோர் சத்திய பதியே
சத்துவ நெறியில் சார்ந்தசன் மார்க்கர்
தமக்குளே சார்ந்தநற் சார்பே
பித்துறு சமயப் பிணக்குறும் அவர்க்குப்
பெறல் அரி தாகிய பேறே
புத்தமுதளித்தென் உளத்திலே கலந்து
பொதுநடம் புரிகின்ற பொருளே. 4071

பரம்பர நிறைவே பராபர வெளியே
பரமசிற் சுகந்தரும் பதியே
வரம்பெறு சிவசன் மார்க்கர்தம் மதியில்
வயங்கிய பெருஞ்சுடர் மணியே
கரம்பெறு கனியே கனிவுறு சுவையே
கருதிய கருத்துறு களிப்பே
புரம்புகழ் நிதியே சிரம்புகல் கதியே
பொதுநடம் புரிகின்ற பொருளே. 4074

Koviloor Digital Library

அடியனேன் பொருட்டிவ் வவனிமேல் கருணை
அருள்வடி வெடுத்தெழுந் தருளி
நெடியனே முதலோர் பெறற்கரும் சித்தி
நிலைஎலாம் அளித்தமா நிதியே
மடிவுறா தென்றும் சுத்தசன் மார்க்கம்
வயங்கநல் வரந்தந்த வாழ்வே
பொடிஅணி கனகப் பொருப்பொளிர் நெருப்பே
பொதுநடம் புரிகின்ற பொருளே. 4079

காய்மையே தவிர்த்துக் கருணையே கனிந்த
கற்பகத் தனிப்பெருந் தருவே
தூய்மையே விளக்கித் துணைமையே அளித்த
ஜோதியே தூய்மைஇல் லவர்க்குச்
சேய்மையே எல்லாம் செயவல்ல ஞான
சித்தியே சுத்தசன் மார்க்க
வாய்மையே என்றேன் வந்தருட் ஜோதி
வழங்கினை வாழிநின் மாண்பே. 4093

தத்துவங் கடந்த தத்துவா ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சத்துவ நெறியில் நடத்திஎன் தனைமேல்
தனிநிலை நிறுத்திய தலைவா
சித்துவந் தாடும் சித்திமா புரத்தில்
திகழ்ந்தவா திகழ்ந்தென துளத்தே
ஒத்துநின் றோங்கும் உடையவா கருணை
உளத்தவா வளத்தவாழ்வருளே. 4152

Koviloor Digital Library

புன்மார்க்கத் துள்ளும் புறத்தும் வேறாகிப்
புகன்றசொல் அன்றுநும் பொன்னடி கண்ட
சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் காணச்
சத்தியம் சத்தியம் சத்தியம் சொன்னேன்
தன்மார்க்கத் தென்னுடல் ஆதியை நுமக்கே
தந்தனன் திருவருட் சந்நிதி முன்னே
என்மார்க்கத் தெப்படி யேனுஞ்செய் கிற்பீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 4227

மன்செய்து கொண்டசன் மார்க்கத்தில் இங்கே
வான்செய்து கொண்டது நான்செய்து கொண்டேன்
முன்செய்து கொண்டதும் இங்ஙனங் கண்டீர்
மூவகை யாம்உடல் ஆதியை நுமது
பொன்செய்து கொண்ட பொதுவினில் ஆடும்
பொன்னடி காணப் பொருந்திக் கொடுத்தேன்
என்செய்து கொண்டாலும் செய்துகொள் கிற்பீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 4229

தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கம்ஒன் றில்லார்
மேல்விளை வறிகிலர் வீண்கழிக் கின்றார்
எய்வந்த துன்பொழித் தவர்க்கறி வருள்வீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே. 4230

Koviloor Digital Library

காலையிலே நின்றன்னைக் கண்டுகொண்டேன் சன்மார்க்கச்
சாலையிலே இன்பம் தழைக்கின்றேன் - ஞாலமிசைச்
சாகா வரம்பெற்றேன் தத்துவத்தின் மேல்நடிக்கும்
ஏகா நினக்கடிமை ஏற்று. 4252

குலத்திலே சமயக் குழியிலே நரகக்
குழியிலே குமைந்துவீண் பொழுது
நிலத்திலே போக்கி மயங்கிஏ மாந்து
நிற்கின்றார் நிற்கநான் உவந்து
வலத்திலே நினது வசத்திலே நின்றேன்
மகிழ்ந்துநீ என்உளம் எனும்அம்
பலத்திலே நின்றாய் எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே. 4265

இணைஎன்று தான்தனக் கேற்றது போற்றும் எனக்கு நல்ல
துணைஎன்று வந்தது சுத்தசன் மார்க்கத்தில் தோய்ந்ததென்னை
அணைஎன் றணைத்துக்கொண் டைந்தொழில் ஈந்த தருளுலகில்
திணைஐந்து மாகியது உத்தர ஞான சிதம்பரமே. 4463

உலகம் எலாந்தொழ உற்ற தெனக்குண்மை ஒண்மைதந்தே
இலகஎ லாம்படைத் தாருயிர் காத்தருள் என்றதென்றும்
கலகம்இ லாச்சுத்த சன்மார்க்க சங்கம் கலந்ததுபார்த்
திலகம் எனாநின்றது உத்தர ஞான சிதம்பரமே. 4464

கொல்லா நெறியது கோடா நிலையது கோபமிலார்
சொல்லால் உவந்தது சுத்தசன் மார்க்கந் துணிந்தஉல
கெல்லாம் அளிப்ப திறந்தால் எழுப்புவ தேதம்ஒன்றும்
செல்லா வளத்தினது உத்தர ஞான சிதம்பரமே. 4469

Koviloor Digital Library

துன்பெலாந் தீர்ந்தன சுகம்பலித் ததுநினைச்
சூழ்ந்ததருள் ஒளிநிறைந்தே
சுத்தசன் மார்க்கநிலை அனுபவம் நினக்கே
சுதந்தரம தானதுலகில்
வன்பெலாம் நீக்கிநல் வழியெலாம் ஆக்கிமெய்
வாழ்வெலாம் பெற்றுமிகவும்
மன்னுயிர் எலாம்களித் திடநினைத் தனைஉன்தன்
மனநினைப் பின்படிக்கே

அன்பநீ பெறுகஉல வாதுநீ டூழிவிளை
யாடுக அருட்ஜோதியாம்
ஆட்சிதந் தோம்உனைக் கைவிடோம் கைவிடோம்
ஆணைநம் ஆணைஎன்றே
இன்புறத் திருவாக் களித்தெனுள் ளேகலந்
திசைவுடன் இருந்தகுருவே
எல்லாஞ்செய் வல்லசித் தாகிமணி மன்றினில்
இலங்குநட ராஜபதியே. 4636

பேருற்ற உலகிலுறு சமயமத நெறிஎலாம்
பேய்ப்பிடிப் புற்றபிச்சுப்
பிள்ளைவிளை யாட்டென உணர்ந்திடா துயிர்கள்பல
பேதமுற் றங்கும் இங்கும்
போருற் றிறந்துவீண் போயினார் இன்னும்வீண்
போகாத படிவிரைந்தே
புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டிமெய்ப்
பொருளினை உணர்த்திஎல்லாம்
ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதிநீ
என்பிள்ளை ஆதலாலே
இவ்வேலை புரிகஎன் றிட்டனம் மனத்தில்வே
றெண்ணற்க என்றகுருவே
நீருற்ற ஒள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்திருள் அகற்றும்ஒளியே
நிர்க்குணா னந்தபர நாதாந்த வரைஓங்கு
நீதிநட ராஜபதியே. 4637

Koviloor Digital Library

சாகாத கல்வியே கல்விஒன் றேசிவம்
தான்என அறிந்தஅறிவே
தகும் அறிவு மலம்ஐந்தும் வென்றவல் லபமே
தனித்தபூ ரணவல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
விளையவிளை வித்ததொழிலே
மெய்த்தொழில தாகும்இந் நான்கையும் ஒருங்கே
வியந்தடைந் துலகம்எல்லாம்
மாகாத லுறஎலாம் வல்லசித் தாகிநிறை
வானவர மேஇன்பமாம்
மன்னும்இது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்
மரபென் றுரைத்தகுருவே
தேகாதி மூன்றும்நான் தருமுன்அருள் செய்தெனைத்
தேற்றிஅருள் செய்தசிவமே
சிற்சபையின் நடுநின்ற ஒன்றான கடவுளே
தெய்வநட ராஜபதியே. 4638

சேய்போல் உலகத் துயிரைஎல் லாம்எண்ணிச் சேர்ந்துபெற்ற
தாய்போல் உரைப்பர்சன் மார்க்கசங் கத்தவர் சாற்றும்எட்டிக்
காய்போல் பிறர்தமைக் கண்டால் கசந்துள் கடுகடுத்தே
நாய்போல் குரைப்பர்துன் மார்க்கசங் கத்தவர் நானிலத்தே. 4895

திருநெறிஒன் றேஅதுதான் சமரசசன் மார்க்கச்
சிவநெறிஎன் றுணர்ந்துலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு
வருநெறியில் எனையாட்கொண் டருளமுதம் அளித்து
வல்லபசத் திகளெல்லாம் வழங்கியஓர் வள்ளல்
பெருநெறியில் சித்தாடத் திருவுளங்கொண் டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருதருணம் இதுவே
கருநெறிவீழ்ந் துழலாதீர் கலக்கமடை யாதீர்
கண்மையினால் கருத்தொருமித் துண்மைஉரைத் தேனே. 4810

Koviloor Digital Library

உண்மையுரைக் கின்றேன்இங் குவந்தடைமின் உலகீர்
உரைஇதனில் சந்தேகித் துளறிவழி யாதீர்
எண்மையினான் எனநினையீர் எல்லாஞ்செய் வல்லான்
என்னுள் அமர்ந் திசைக்கின்றான் இதுகேண்மின் நீவிர்
தண்மையொடு சுத்தசிவ சன்மார்க்க நெறியில்
சார்ந்துவிரைந் தேறுமினோ சத்தியவாழ் வளிக்கக்
கண்மைதரும் ஒருபெருஞ்சீர்க் கடவுள்எனப் புகலும்
கருணைநிதி வருகின்ற தருணம்இது தானே. 4811

முயன்றுலகில் பயன்அடையா மூடமதம் அனைத்தும்
முடுகிஅழிந் திடவும்ஒரு மோசமும்இல் லாதே
இயன்றஒரு சன்மார்க்கம் எங்குநிலை பெறவும்
எம்மிறைவன் எழுந்தருளல் இதுதருணம் கண்டீர்
துயின்றுணர்ந்தே எழுந்தவர்போல் இறந்தவர்கள் எல்லாம்
தோன்றஎழு கின்றதிது தொடங்கிநிகழ்ந் திடும்நீர்
பயின்றறிய விரைந்துவம்மின் படியாத படிப்பைப்
படித்திடலாம் உணர்ந்திடலாம் பற்றிடலாம் சுகமே. 4815

மற்றறிவோம் எனச்சிறிது தாழ்த்திருப்பீர் ஆனால்
மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ
சற்றும் அதை நும்மாலே தடுக்கமுடி யாதே
சமரசசன் மார்க்கசங்கத் தவர்கள் அல்லால் அதனை
எற்றிநின்று தடுக்கவல்லார் எவ்வுலகில் எவரும்
இல்லைகண்டீர் சத்தியமீ தென்மொழிகொண் டுலகீர்
பற்றியபற் றனைத்தினையும் பற்றறவிட் டருளம்
பலப்பற்றே பற்றுமினோ என்றும்இற வீரே. 4822

உற்றமொழி உரைக்கின்றேன் ஒருமையினால் உமக்கே
உறவன் அன்றிப் பகைவன்என உன்னாதீர் உலகீர்

Koviloor Digital Library

கற்றவரும் கல்லாரும் அழிந்திடக்காண் கின்றீர்
கரணம்எலாம் கலங்கவரும் மரணமும்சம் மதமோ
சற்றும் இதைச் சம்மதியா தென்மனந்தான் உமது
தன்மனந்தான் 'கன்மனமோ வன்மனமோ அறியேன்
இற்றிதனைத் தடுத்திடலாம் என்னொடுசேர்ந் திடுமின்
என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந் தானே. 4824

சன்மார்க்கப் பெருங்குணத்தார் தம்பதியை என்னைத்
தாங்குகின்ற பெரும்பதியைத் தனித்தசபா பதியை
நன்மார்க்கத் தெனைநடத்திச் சன்மார்க்க சங்கம்
நடுவிருக்க அருளமுதம் நல்கியநா யகனைப்
புன்மார்க்கர்க் கறிவரிதாம் புண்ணியனை ஞான
பூரணமெய்ப் பொருளாகிப் பொருந்தியமா மருந்தை
அன்மார்க்கம் தவிர்த்தருளி அம்பலத்தே நடஞ்செய்
அருட்பெருஞ்ஜோ தியைஉலகீர் தெருட்கொளச்சார் வீரே. 4825

உலகமெலாம் போற்ற ஒளிவடிவ னாகி
இலகஅருள் செய்தான் இசைந்தே - திலகன் என
நானேசன் மார்க்கம் நடத்துகின்றேன் நம்பெருமான்
தானே எனக்குத் தனித்து. 4954

ஓவுறாத் துயர்செயும் உடம்புதான் என்றும்
சாவுறா தின்பமே சார்ந்து வாழலாம்
மாவுறாச் சுத்தசன் மார்க்க நன்னெறி
மேவுறார் தங்களை விடுக நெஞ்சமே. 4963

பொத்திய மலப்பிணிப் புழுக்கு ரம்பைதான்
சித்தியல் சுத்தசன் மார்க்கச் சேர்ப்பினால்
நித்திய மாகியே நிகழும் என்பது சத்தியம்
சத்தியம் சகத்து ளீர்களே. 4964

வானாகி வானடுவே மன்னும்ஒளியாகி யதனில்
தானாகி வானாகிச் சன்மார்க்கர் உள்ளிருக்குந்

Koviloor Digital Library

தேனாகித் தெள்ளமுதாய்த் தித்திக்கும் தேவேநீ
யானாகி என்னுள் இருக்கின்றாய் என்னேயோ. 4965

கண்டேன் சிற்றம்பலத் தானந்த நாடகம் கண்டுகளி கொண்டேன்
எல்லாம்வல்ல சித்தனைக் கூடிக் குலவி அமு துண்டேன் மெய்ஞ்ஞான
உருஅடைந் தேன்பொய் உலகொழுக்கம் விண்டேன் சமரச
சன்மார்க்கம் பெற்ற வியப்பிதுவே. 4973

கண்கொண்ட பூதலம் எல்லாம்சன் மார்க்கம் கலந்துகொண்டே
பண்கொண்ட பாடலில் பாடிப் படித்துப் பரவுகின்றார் விண்கொண்ட
சிற்சபை ஒன்றே நிறைந்து விளங்குகின்ற தெண்கொண்ட மற்றை
மதமார்க்கம் யாவும் இறந்தனவே. 4974

செத்தார் எழுந்தனர் சுத்தசன் மார்க்கம் சிறந்ததுநான்
ஒத்தார் உயர்ந்தவர் இல்லா ஒருவனை உற்றடைந்தே
சித்தாடு கின்றனன் சாகா வரமும் சிறக்கப்பெற்றேன்
இத்தா ரணியில் எனக்கிணை யார்என் றியம்புவேனே. 4975

உயிரெலாம் ஒருநீ திருநடம் புரியும்
ஒருதிருப் பொதுஎன அறிந்தேன்
செயிரெலாம் தவிர்ந்தேன் திருவெலாம் அடைந்தேன்
சித்தெலாம் வல்லதொன் றறிந்தேன்
மயிரெலாம் புளகித் துளமெலாம் கனிந்து
மலர்ந்தனன் சுத்தசன் மார்க்கப்
பயிரெலாம் தழைக்கப் பதியெலாம் களிக்கப்
பாடுகின் றேன் பொதுப் பாட்டே. 4981

சொல்லுகின்றேன் பற்பலநான் சொல்லுகின்ற வெல்லாம்
துரிசலவே சூதலவே தூய்மையுடை யனவே
வெல்லுகின்ற வார்த்தை அன்றி வெறும்வார்த்தை என்வாய்
விளம்பாதென் ஐயர்நின்று விளம்புகின்ற படியால்
செல்லுகின்ற படியேநீ காண்பாய்இத் தினத்தே
தேமொழிஅப் போதெனைநீ தெளிந்துகொள்வாய் கண்டாய்
ஒல்லுகின்ற வகைஎல்லாம் சொல்லுகின்றே னடிநான்
உண்மைஇது உண்மைஇது உண்மைஇது தானே. 4994

Koviloor Digital Library

ஆடுகின்ற சேவடிக்கே ஆளானேன்
மாளாத ஆக்கைப் பெற்றேன்
கூடுகின்ற சன்மார்க்க சங்கத்தே
நடுவிருந்து குலாவு கின்றேன்
பாடுகின்றேன் எந்தைபிரான் பதப்புகழை
அன்பினொடும் பாடிப் பாடி
நீடுகின்றேன் இன்பக்கூத் தாடுகின்றேன்
எண்ணமெலாம் நிரம்பி னேனே. 4998

சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் உமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடும் கேட்பீர்
என்மார்க்கத் தெனைநுமக்குள் ஒருவனெனக் கொள்வீர்
எல்லாம்செய் வல்லநம திறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே
புந்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்க மாய்விளங்கும் சுத்தசிவம் ஒன்றே
தன்ஆணை என்ஆணை சார்ந்தறிமின் ஈண்டே. 5003

ஆதியும்நடுவும் அந்தமும் இல்லா
அருட்பெருஞ் ஜோதிஎன் உளத்தே
